ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

09.09.2009 - மலர் 06, இதழ் 27



## புகழ் பெற்ற ஓவியர்கள்

## பிரான்ஸில் ஒரே நாளில் இரண்டு கொண்டாட்டங்கள்

## அநுராதபுரத்தின் முக்கிய குளங்கள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யானை வர்த்தகம்

அக்கால கிராம மக்கள் ஒல்லாந்தருக்கு பாக்கு மூலமாகவே தமது வரிகளைச் செலுத்தவேண்டி இருந்தது. கி.பி 1679 இல் இலங்கையில் தமது போர்ப்படைகளை நடத்துவதற்கு ஒல்லாந்த வர்த்தக சங்கம் செலவிட்ட பணத்தை அவர்கள் பாக்குப் பயிர் மூலமாகவே பெற்றுக்கொண்டதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

மே மாதம் முதல் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியினுள் ஒல்லாந்தர் மாத்தறை திசாவையில் யானைகளை நிறுத்தினர். அவர்கள் யானைகள் திணைக்களத்தை நிறுவினர். அதனை 'கூறுவே' எனும் பெயரில் அழைத்தனர். அக்கூறுவேயில் நிரந்தரமாக வசிப்ப தற்கு விதானைமார்களை நியமித்தனர். அவர்கள் 30 யானைகளையும் 9 தந்தமுள்ள யானைகளையும் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திடம் வருடந்தோறும் கையளிக்க வேண்டும் என கட்டளையிட்டனர். அது கப்பமாகவே கையளிக்கப்பட்டது. அதேபோல் 'வன்னி' ஆட்சியாளர்களும் வருடந்தோறும் 80 யானைகளை வர்த்தக சங்கத்திடம் கையளிக்க வாக்குறுதியளித்தனர். ஒல்லாந்த சங்கமும் வன்னியில் யானைகளை நிறுத்தும் சாலையை அமைத்தது. அவர்கள் மட்டக்களப் பிலிருந்தும் திருகோணமலையி லிருந்தும் யானைகளை பெற்றுக் கொண்டனர். இந்த யானைகள் அனைத்தையும் தென் இந்தியாவில் இருந்து வருகை தரும் வர்த்தகர்களுக்கு விற்றனர்.

அந்த வர்த்தகம் காலியிலும் யாழ்ப்பாணத்திலுமே நடைபெற் றது. இந்த வர்த்தகத்தின் மூலம் வருடமொன்றிற்கு 200,000 கில்டர்ஸ் வர்த்தக சங்கத்திற்கு கிடைத்தது. அன்று பாவனையில் இருந்த ஒல்லாந்த (டச்) நாணய முறையே 'கில்டர்ஸ்' ஆகும்.

ஒல்லாந்தர் நிலபுலன் களுக்கும் வரி அறவிட்டனர். றைகம, சல்பிட்டி, ஹேவாகம், சியனே ஆகிய கோரளைகளில் இருந்த ஊர்களை அவர்கள் தம்வசம் உள்ள சொத்தாகவே கருதினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி முகாம்களுக்கு தற்காலிக நூலகங்கள்

நலன்புரி முகாம்களில் இருக்கின்ற பிள்ளைகளின் நலன் கருதி அந்த முகாம்களில் தற்காலிக நூலகங்களை அமைப்பதற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தீர்மானித்துள்ளார்.

இதற்கமைய, தற்போது சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான 12,000 புத்தகங்கள் கிடைத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இதுதவிர, முதலாம் தரத்திலிருந்து பதின்மூன்றாம் தரம் வரையிலான பாடசாலை பாடத்திட்டங்களுடன் தொடர்புடைய ஆங்கிலம் மற்றும் தமிழ் புத்தகங்கள், பரீட்சை வினா-



விடை புத்தகங்கள் என்பன மேற்படி தற்காலிக நூலகங்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நூலகங்களுக்கான நூலகர்களாக முகாம்களில் இருக்கும் ஆசிரியர்களை தெரிவுசெய்து நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## வைரஸ்களை அழிக்கும் 'வைரஸ் குண்டு'

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் பன்றிக் காய்ச்சலை தோற்றுவிக்கக்கூடிய H1N1 வைரஸ்களை அழிப்பதற்காக 'வைரஸ் குண்டு' உருவாக்கப்பட்டுள்ளது.




தாய்வான் நாட்டின் தேசிய பல்கலைக்கழக ஆய்வாளரான லின் என்பவரின் தலைமையிலான மருத்துவ ஆராய்ச்சிக் குழுவினரே இதனை உருவாக்கியுள்ளனர். இந்த வைரஸ் குண்டு பன்றிக் காய்ச்சல் மற்றும் பறவைக் காய்ச்சல் போன்ற நோய்களைப் பரப்பக்கூடிய வைரஸ்களை அழிக்கக்கூடியது என்பதோடு, இந்த நோய்களின் பரவலையும் தடுக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## 15 வருடங்களுக்குப் பின்னர் ஏ 9 பாதையூடாக பாடப்புத்தகங்கள் எடுத்துச் செல்லப்படவுள்ளன

**மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற பாடசாலை பாடப்புத்தகங்களை 15 வருடங்களுக்குப் பின்னர் ஏ 9 பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தீர்மானித் துள்ளது.**



**ரூபா 3 கோடி பெறுமதியான பாடப் புத்தகங்களே இவ்வாறு ஏ 9 பாதையூடாக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஜயந்த புஷ்பகுமார தெரிவித் துள்ளார். கடந்த காலங்களில் கடல் மார்க்கமாகவே பாடப்புத்தகங்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**

## 'ரொபோ' கண்காட்சி



அண்மையில் சுவிற்சர்லாந்து நாட்டின் சூரிச் நகரில் 'ரொபோ' கண்காட்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 'ரொபோக்களின் ஆரம்ப இயக்கம் முதல் ஆச்சரியமூட்டும் இயக்கம் வரை' என்ற தொனிப்பொருளின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கண்காட்சியில் 1950 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை உள்ள அனைத்து விதமான ரொபோக்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. வீட்டு வேலை செய்யும் ரொபோ, தொழிற்சாலை ரொபோ, மருத்துவத்துறை ரொபோ, ராணுவ ரொபோ என அங்கிருந்த பலதரப்பட்ட ரொபோக்கள் பார்வையாளர்களை வியக்க வைத்தன.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பற்கள் மீண்டும் முளைக்கும்



ஒரு குழந்தை பிறந்து ஏழாவது மாதத்தில் இருந்து இயல்பாக பற்கள் வளரத் தொடங்கும். ஆறு வயதுக்குள்ளாக பால் பற்கள் ஒருமுறை விழுந்து மீண்டும் பற்கள் முளைத்துவிடும். அதன்பின்னர் ஏதோவொரு காரணத்தினாலோ அல்லது இயற்கையாகவேனும் பற்கள் விழுந்தால் அவை மீண்டும் முளைக்க வழியில்லை. அதன்படி, இதுவரை பற்கள் உதிர்ந்துவிட்டால் அல்லது விபத்தில் உடைந்து போனால் செயற்கைப் பற்களைப் பொருத்திக்கொள்ளும் முறையே இருந்து வருகிறது. எனினும், இந்த நிலைமையை மாற்றும் வகையில் மீண்டும் பற்களை முளைக்க வைப்பதில் ஜப்பானிய விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

தற்போது அனைத்திலும் சிறந்த வழியாக, உலகில் முதல் முறையாக 'ஸ்டெம் செல்' முறையில் புதிய பற்களை மீண்டும் முளைக்க வைத்துள்ளனர் விஞ்ஞானிகள்.



ஜப்பானைச் சேர்ந்த டோக்கியோ பல்கலைக்கழக ஆய்வாளர்கள், இதற்காக எலிகளை ஆய்வுக்கு உட்படுத்தினார்கள். முதலில் எலியின் மேல்தாடையில் உள்ள பற்களை அகற்றிவிட்டு 'ஸ்டெம் செல்' முறையில் அவற்றின் பற்களை வளர்த்துள்ளனர்.

அதன்படி, ஐந்து நாட்களுக்குள் முளைக்கத் தொடங்கிய பற்கள் ஐந்து வாரங்களில் ஈறுடன் இணைந்து உறுதியடைந்துள்ளன. அதுவே, ஏழாவது வாரம் முதல் இயல்பான பற்களைப்போன்று அவற்றைப் பயன்படுத்த முடிந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், இயற்கைப் பற்களைப் போலவே இவற்றுக்கான குருதி ஓட்டம் சீராக கிடைக்கின்றது என்பதாகும். அத்துடன், பளிச்சென்ற எனாமலும் உள்ளது. மேலும், உணவை மென்று சாப்பிடுவதிலும் எந்தவித சிரமங்களும் இல்லை.

'ஸ்டெம் செல்' ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பலதரப்பு விஞ்ஞானிகளும் இந்த முறைக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர். இந்த முறையில் மனிதனின் பற்களை வளர்க்க குறைந்தபட்சம் ஓராண்டு ஆகும் என்று கருதப்படுகின்றது. இன்னும் 15 ஆண்டுகளில் எல்லா நாடுகளிலும் இந்த முறை பரவிவிடும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர்.

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH CORSE
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாறே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி ∴ வீண் கட்டணங்கள் இல்லை
* குரகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ / மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
பாடநெறியில் இணையும் அணைவருக்கும
அழகிய பேக் ஒன்றும் Tigo Sim (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
இந்த DIPLOMA சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0817 918 981 / 0773 123 523
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காசநோயைத் தவிர்ப்போம்

**முயற்சியும் அர்ப்பணிப்பும் நல்ல ஈடுபாடும் இருந்தால் எம்மால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. எமக்கு நோயொன்று ஏற்பட்டால் அதனைச் சுகப்படுத்துவதற்கு கூட மிகுந்த முயற்சி எடுப்பது மிக அவசியமாகும். இத்தகைய முயற்சியும் ஈடுபாடும் இருந்தால் சுகப்படுத்தக்கூடிய காசநோய் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.**

காசநோயானது பல சகாப்தங்களாக மனித சமுதாயத்தை அச்சுறுத்தி வரும் ஒரு நோயாகும். 1940 மற்றும் 1950 ஆம் ஆண்டுகள் வரை காசநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்பட வில்லை.உடல் சிதைவடையும் உடல் மெலியும் நோயென்றும் ஒருவித தொற்றுநோய் என்றும் காசநோய் கருதப்பட்டது.

எனினும், 1865 இல் காசநோயானது ஒரு தொற்று நோயென 'யான் என்துமான் விலெமின்' எனும் பிரான்சிய சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் நிரூபித்தார். பின் 1882 இல் ரொபர்ட் கொக் எனும் ஜேர்மனிய விஞ்ஞானி காசநோயை ஏற்படுத்தும் 'பியுபக்கல் பெசிலய்' எனப்படும் பக்றீரியா வைகண்டுபிடிப்பதில் வெற்றி கண்டார். நோய்க்கான கிருமியை கண்டுபிடித்தார்களே தவிர, இதற்கான மருந்தைக் கண்டுபிடிக்க அதற்குப் பின் மேலும் 60 வருடங்கள் சென்றன.1943ஆம் ஆண்டுதான் சொலமன் வோக்ஸ்மன் எனும் அமெரிக்க விஞ் ஞானியால் காசநோய்க்கு காரணமான பக்றீரி யாவை அழித்தொழிக்கும் மருந்து கண்டுபிடிக் கப்பட்டது. 1943-1952 இற்கு இடைப்பட்ட காலத்தில் மேலும் இரண்டு வகையான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டதோடு காசநோய் சுகப்படுத்தக் கூடியதொரு நோய் என தீர்மானிக்கப்பட்டது.




## உலக காசநோய் தினம்

உலக காசநோய் தினமாக மார்ச் மாதம் 24 ஆம் திகதி பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது.1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்தினமானது 'நான் காசநோயை தடுப்பேன்' என்னும் தொனிப்பொருளைக் கொண்டுள்ளது.

## காசநோய் என்றால் என்ன?

காசநோயானது கிருமிகளால் பரவும் ஒரு நோயாகும். இந்த நோய்க்கிருமிகள் 'மைக்கோபெக்டீரியம் பியுபக்யுலோசிஸ்' அல்லது 'டியூபகல் பெசிலஸ்' என அழைக்கப்படுகின்றது. அதிகமாக இந்த நோய் (நுரையீரல்) சுவாசப்பைகளிலேயே ஆரம்பமாகின்றது.

## எவ்வாறு தொற்றுகின்றது?

காசநோயால் பீடிக்கப்பட்ட ஒரு நோயாளியின் இருமல் மூலம் அல்லது அவர் எச்சிலை உமிழும்போது அல்லது அவருக்கு தும்மல் ஏற்படும் வேளையில் வெளியேறும் துளிகள் மூலம் காசநோய் விஷக்கிருமிகள் பரவுகின்றன. நோய் (விஷ)க்கிருமிகளுடன் கூடிய இந்த எச்சில் துளிகளை உடல் ஆரோக்கியமான ஒருவர் சுவாசித்தால் அவருக்கும் இந்த நோய்த் தொற்று ஏற்படுகின்றது.


சளியுடன் குருதி வெளியேறுதல்

## நோய்க்கான அறிகுறிகள்

இந்த நோய் தொற்றியதற்கான ஆரம்பகால அறிகுறிகள் பல உண்டு.

- 3 வாரங்களுக்கு மேல் தொடர்ந்திருக்கும் இருமல்.
- சளியுடன் குருதி வெளியேறுதல்.
- நெஞ்சுவலி உணவில் வெறுப்பு.
- உடலின் நிறை குறைதல், ✱ மெலிவடைதல்.
- இரவு நேரத்தில் ஓரளவு காய்ச்சல் ஏற்படுதல். அத்துடன், அதிகளவில் வியர்வை ஏற்படுதல் என்பன இந்த நோய்க்கான அறிகுறிகளாகும்.

## கிருமிகள் உடலினுள் சென்றவுடனேயே நோய் ஏற்படுமா?

நோய்க்கிருமிகள் உடலினுள் சென்ற அனைவருக்குமே இந்த நோய் ஏற்படுவதில்லை. அவர்களில் 10% மான ஒரு சிறு தொகை யினருக்கே இந்த நோய் ஏற்பட வாய்ப்புண்டு. எமது உடலில் நோய்களுடன் தாக்குப்பிடிக்கக்கூடிய நோய் எதிர்ப்புச் சக்தி இருப்பதே அதற்கு முக்கிய காரணமாகும். எனினும், என்றோ ஒருநாள் எமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடையும்போது நோய் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

## நோயெதிர்ப்புச் சக்தி எவ்வாறு குறைவடைகின்றது?

எமது உடலில் நோயெதிர்ப்புச் சக்தி குறைவடைவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவையாவன:-



- நீரிழிவு
- புகைத்தல், மதுபாவனை, போதைப் பொருட்களுக்கு அடிமையாகுதல்.




- நீண்டகாலமாக மருந்துகளைத் தொடர்ந்து (ஸ்டீரொய்ட் போன்ற) உட்கொள்ளல்.
- HIV வைரசினால் பீடிக்கப்பட்டிருத்தல்.

## காசநோயை உறுதிப்படுத்துவது எப்படி?

மேல் குறிப்பிட்டுள்ள நோய்க்கான அறிகுறிகள் இருந்தால் உடனடியாக சளியைப் பரிசோதிப்பதன் மூலம் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா? என்பதை உறுதியாக அறிந்துகொள்ள லாம். இந்த சளிப்பரிசோதனையை அருகிலுள்ள இருதய சிகிச்சை நிலையத்தில் இலவசமாகவே செய்துகொள்ளலாம்.

## எவ்வாறு சிகிச்சை பெறலாம்?

- இந்த நோய் ஏற்பட்டால் அதனைச் சுகப்படுத்த உரிய காலகட்டத்தினுள் சரியான அளவான மருந்து வகைகளைத் தவறாமல் தொடர்ந்து ஒரே முறையில் எடுக்கவேண்டும்.
- காசநோய் ஏற்பட்ட ஒருவருக்கு சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று வாரங்கள் கழிந்தால் அவர் மூலமாக வேறு ஒருவருக்கு நோய் தொற்றாது.
- நவீன சிகிச்சை முறைப்படி ஆறுமாத காலத்திற்குள் காசநோயை முற்றாக சுகப்படுத்தலாம்.
- சில நோயாளிகளுக்கு வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறவேண்டிய அவசியம் இருக்காது. அன்றாடம் தத்தமது கடமைகளை செய்தபடியே சிகிச்சை பெறக்கூடிய வாய்ப்பு உண்டு.
- தற்போதைய நவீன சிகிச்சை முறை யால் மாத்திரைகளின் எண்ணிக்கை குறைக்கப் பட்டிருப்பது மற்றுமொரு இலகு நடவடிக்கை ஆகும். மிகவும் விரைவாக நோயை கண்டுபிடிப்பதும் விரிவான சிகிச்சைகளை மேற்கொள்வதும் தும்மும்போதும் சளியை அகற்றும் போதும் மூக்கை மூடிக்கொள் வதும் கண்ட கண்ட இடங்களில் சளியைத் துப்பாமல் அதனை ஒரு பாத்திரத்தில் சேர்த்து வைத்து புதைப்பதன் மூலமும் அல்லது எரிப்பதன் மூலமும் நோய் பரவாமல் தடுக்கலாம்.


சொல்மன் வொக்ஸ்மன்


டியூபகல் பெசிலஸ் நோய்க்கிருமி

- சகல குழந்தைகளுக்கும் பிறப்பின்போதே பி.சி.ஜி தடுப்பூசி போடவேண்டியது முக்கியமானதாகும்.

## நீங்களும் இப்படி உதவ முடியும்

- நோயாளிகளை சமூகத்தில் இழிவுபடுத்துவதை தவிர்த்தல்.


அன்று


இன்று

- நோய் குறித்து உங்களுக்குத் தெரிந்த விடயங்களை ஏனையோ ரிடம் பகிர்ந்து கொள்ளல்.
- நோய்க்கான அறிகுறி உள்ளவர்கள் அருகில் உள்ள இருதய சிகிச்சை நிலையத்திற்குச் செல்வதன் அவசி யத்தை உணரச் செய்தல்.
- நோயாளிகள் என இனங்காணப் பட்டவர்கள் சரியான சிகிச்சை பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

-இரஞ்சித் ஜெயகர்




உணவில் வெறுப்பு


நிறைகுறைதல்


இரவு வேளைகளில் அதிக வியர்வை


சிறிது காய்ச்சல் ஏற்படுதல்


மூன்று வாரங்களுக்கு மேலான இருமல். (இது நோய்க்கான முக்கிய அறிகுறியாகும்)


அதிக களைப்பு (சோர்வு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஸ்கவரியின் தாமதமான பயணம்

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா, 13 நாடுகளுடன் சேர்ந்து விண்வெளியில் ஆராய்ச்சி நிலையத்தை அமைத்து வருகிறது. இதற்குத் தேவையான பொருட்கள் அமெரிக்காவின் 'டிஸ்கவரி' மற்றும் ரஷ்யாவின் 'சோயுஸ்' விண்கலங்கள் மூலம் அடிக்கடி அனுப்பப்பட்டு வருகின்றன.




அமெரிக்காவின் 'டிஸ்கவரி' விண்கலம் அதன் STS -128 செயற்றிட்டத்துக்கான




விண்வெளிப் பயணத்தை 7 விண்வெளி வீரர்களுடன் 33,000 பவுண்ட்ஸ் எடையுடைய பொருட்களை எடுத்துக் கொண்டு கடந்த ஓகஸ்ட் 27 ஆம் திகதி தொடர இருந்தது. அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் விண்கலத்தில் உள்ள எரிபொருள் தாங்கியின் வால்வு ஒன்றில் கோளாறு ஏற்பட்டுள்ளமை தெரியவந்தது. இதனால், 'டிஸ்கவரி' விண்கலம் விண்வெளியில் செலுத்தப்படுவது ஒத்திவைக்கப்பட்டது. குறித்த விண்கலத்தின் விண்வெளிப் பயணம் இவ்வாறு ஒத்திவைக்கப்படுவது இது இரண்டாவது தடவையாகும். ஏற்கனவே இந்த விண்கலம் ஓகஸ்ட் 25 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்படுவதாக இருந்தது. அப்போது நிலவிய சீரற்ற காலநிலையினால் அப்பயணம் முதல் முறையாக ஒத்திவைக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த இரண்டு ஒத்திவைப்புகளையும் அடுத்து கடந்த மாதம் 29 ஆம் திகதி 'டிஸ்கவரி' விண்கலம் மீண்டும் விண்ணில் செலுத்தப்பட்டது.

## செலவைக் குறைக்கும் சூரிய விண்கலம்



இன்றைய விண்வெளி விஞ்ஞானம் எரிபொருளையே நம்பியுள்ளது. ரொக்கெட் சுமந்து செல்லும் விண்கலம் விண்வெளியை அடைந்ததும் ரொக்கெட்டை சூரிய குடும்பத்திலிருந்து வெளியேற்ற வேண்டும். இதற்கு, அதிகமான எரிபொருள் செலவாகும். அதன் பின்னர் தொடர்ந்து பயணித்து ஆய்வுகளை மேற்கொள்ள மேலும் எரிபொருள் தேவை. இங்கு விண்கலம் அதிவிரைவாகவும் அதிக தொலைவுக்கும் பயணிக்கும்போது அதிகளவு எரிபொருள் செலவா கின்றது. ஆக, இது செலவு மிகுந்த செயற்பாடாகும். எனவே, இந்த விடயங்களைக் கருத்தில்கொண்டு சூரிய விண்கலங்களைப் பயன்படுத்த விண்வெளி ஆராய்ச்சி வல்லுனர்கள் முன்வந்துள்ளனர். சூரிய சக்தி விண்கலம் செலவு குறைந்ததோடு, அதை மீளப் பயன்படுத்தவும் முடியும்.

காற்றின் மூலம் உந்தப்படுவதற்கு பதிலாக இக்கலம் ஒளியின் உந்துதலைப் பெற்றுப் பயணிக்கும். சூரியனிலிருந்து வெளித்தள்ளப்படும் போட்டோன்கள் எனப்படும் ஒளிக்கற்றைகள், ஒரு சிறிய விண்கலத்தை சூரிய குடும்பத்திலிருந்து வெளியேற்றி விண்மீன் கூட்டங்களுக்கு அப்பால் தள்ளக்கூடிய அளவுக்கு ஆற்றல் வாய்ந்தவை.

அத்துடன், சூரிய சக்தி விண்கலத்தில் மரபு சார்ந்த எரிபொருள் நிரப்பப்படுவதில்லை. எனவே, இது கனம் குறைந்ததாகவும் செலுத் துவதற்குச் சுலபமானதாகவும் இருக்கும். இந்த விண்கலத்தில் மனிதர்களுக்குப் பதிலாக ரொபோக்களையே அனுப்பவுள்ளனர். இது ஒரு வினாடிக்கு 90 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக் கூடியது. இந்த வேகம் இன்றைய விண்கலங்களைவிட பத்து மடங்கு அதிகமானதாகும்.

இதுதவிர, எதிர்காலத்தில் மற்றொரு மாற்று எரிபொருள் விண்கலம் நடைமுறைக்கு வரவுள்ளதாம். அதுதான் அணுசக்தி விண்கலம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## விபத்துக்குள்ளான வியாழன்

**கடந்த ஜுலை 19 ஆம் திகதி விண்கல்லொன்று அல்லது சிறிய கோளொன்று திசை மாறிப் பயணித்ததால் வியாழன் கோளுடன் மோதியுள்ளது. இதனையடுத்து வியாழனின் கீழ்ப்பகுதியில் கருமையான ஒரு தழும்பு ஏற்பட்டுள்ளது. வியாழனுடன் மோதிய வேகத்தில் குறித்த விண்கல் அல்லது சிறிய கோள் தூள் தூளாகச் சிதறியுள்ளதாம். இது வியாழனில் ஏற்பட்டுள்ள இரண்டாவது விண்கல் மோதல் நிகழ்வு என்று விண்வெளி ஆராய்ச்சியாளர்கள்**




**தெரிவிக்கின்றனர். இற்றைக்கு 15 வருடங்களுக்கு முன்னர் 'ஷுமேக்கர்-லெவி 9' என்ற விண்கல் இதேபோன்று வியாழனில் மோதிப் பள்ளத்தை ஏற்படுத்தியிருந்தது.**

## செவ்வாய் நோக்கிச் சென்ற விண்கலங்கள் சில...



மார்ஸ் க்ளோபல் சேர்வியர்

1988 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் ஃபோபஸ் திட்டத்தின் கீழ் ஃபோபஸ் 1, ஃபோபஸ் 2 என்று இரண்டு விண்கலங்களை செவ்வாய்க்கு ஏவியது. எனினும், செவ்வாய் நோக்கிய பயணத்தின் இடைநடுவில் ஃபோபஸ் 1 இன் தொடர்பு அற்றுப் போனது. ஃபோபஸ் 2 ஓரளவு வெற்றி கண்டது. அது செவ்வாயின் சுற்றுப் பாதையை அடைந்து அங்கிருந்து சில தகவல்களை அனுப்பியது. பின்னர் செவ்வாயில் தரையிறங்கும் முன்னர் அதன் தொடர்பு அற்றுப்போனது.



மார்ஸ் பாத்ஃபைண்டர்

1993 இல் ஏவப்பட்ட 'மார்ஸ் ஒப்சர்வர்' எனும் விண்கலம் காணாமல் போனது.

1996 நொவெம்பர் 16 அன்று ரஷ்யாவின் 'பைகனூர்' ஏவுதளத்திலிருந்து 'புரோட்டன்' ரொக்கெட்டில் இணைத்து அனுப்பப்பட்ட 'மார்ஸ் 96' என்ற விண்கலம் அதன் நான்காம் கட்டம் இயங்க மறுத்ததால் பசுபிக் கடலில் விழுந்தது.

1996 டிசம்பர் 4 அன்று அமெரிக்கா செலுத்திய 'மார்ஸ் பாத்ஃபைண்டர்' 1997 ஆம் ஆண்டு செவ்வாயில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. இதில் 'சொஜேர்னர்' என்ற செவ்வாய் ஊர்தியும் சென்றது. அது இரண்டு அடி நீளமும் 5 கிலோ எடையும் கொண்டது. இதன் நகர்வு வேகம் நொடிக்கு 6 மில்லி மீற்றர். அதாவது, மணிக்கு 21.6 மீற்றர்தான்.



மார்ஸ் ஒப்சர்வர்

1997 செப்டெம்பர் 11 அன்று 'மார்ஸ் க்ளோபல் சேர்வியர்' எனும் விண்கலம் செவ்வாய்க்கு அனுப்பப்பட்டது. அதன் கண்காணிப்பின்படி, செவ்வாயின் மேற்பரப்பு அங்கு நிலவும் காற்று வீச்சில் சிதைந்து-கரைந்து போயிருக்கின்றமை தெரியவந்தது. இந்த விண்கலத்தில் பொருத்தப்பட்ட 'தீமிஸ்' என்ற வெப்ப உமிழ்வு பதிவுக் கருவி அங்கு சாம்பல் நிற இரும்புத்தாது உள்ளதா? என்று ஆராய்ந்தது. அவ்வாறு இருந்திருப்பின் அங்கு தண்ணீர் உறைந்திருக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. 2001 ஜூன் மாதம் குறித்த ஊர்தி எடுத்தனுப்பிய படத்திலிருந்து செவ்வாயிலுள்ள ஒலிம்பஸ், அஸ்க்ரேயஸ், பாவோனிஸ், அர்சியா ஆகிய 4 முக்கிய எரிமலைகள் பதிவாகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுராதபுரத்தின் முக்

**உலக நீர் தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. முன்னைய காலத்தில் 'அம்பன்' கங்கையினூடாக பெருக்கெடுத்த நீரைக் கட்டுப்படுத்தி மூன்று குளங்களை அமைத்து நம்நாட்டை வளப்படுத்தினார்கள். இதற்கமைய, அந்த மூன்று குளங்கள் பற்றிய விபரங்களையும் இங்கு பார்ப்போம்.**

## மின்னேரியாக் குளம்

கி.மு 275 இல் அனுராதபுரம் ராச்சியத்தைப் பொறுப்பேற்றுக் கொண்ட மகாசேனனின் ஆட்சிக் காலம் பல காரணங்களினால் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. மிகப்பெரிய தூபியான 'ஜேத்தவன் தூபி' மற்றும் இலங்கையின் மிகப்பாரிய நீர்ப்பாசனத் திட்டமான 'மின்னேரியாக் குளம்' என்பன மகாசேனன் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டவையாகும். 'மினிஹிரி' குளம் என்று பாளி மொழி வம்சக்கதைகளிலும் மினிஹிரி மற்றும் மினிஹொரு என்ற சிங்கள வம்சக்கதைகளிலும் குறிப்பிடப்படும் குளம் இதுவாகும்.

குளம் ஒன்றை அமைக்க இடம் ஒன்றை தேடும் பணியை ரித்திகல அதிகாரம் என்ற அதிகாரிக்கு மகாசேனன் வழங்கியதாகவும் அதற்கு பொருத்தமான சமதரைப் பகுதி கிடைத்ததாகவும் அதில் ராட்சதர்கள் சிலர் இருந்ததாகவும் செவி வழிக் கதைகள் உள்ளன. பின்னர் மின்னேரியாக் குளத்தை அமைக்க அவர்கள் இணங்கி இடத்தை வழங்கியதாகவும் மேலும் குறிப்பிடப்படுகின்றது. 'அம்பன்' கங்கைக்கு குறுக்காக அணையொன்று கட்டி மின்னேரியாக் குளத்திற்கு நீர் பெறப்பட்டதாகவும் வரலாற்றுக் கதைகளில் குறிப்பிடப்படுகின்றது. இரண்டாம் வசப மன்னன் 'எலஹெர' என்ற நீர்வீழ்ச்சியை அகலப்படுத்தி இந்த குளத்திற்கு நீரைப் பெற்றுக்கொண்டதாக புகழ்பெற்ற வரலாற்றாசிரியரான கி.டபிள்யூ. நிக்கலஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்னேரியாக் குளத்தின் அணையின் நீளம் ஒன்றரை மைல்களாகும். உயரம் 44 அடிகளாகும். இதன் பரப்பளவு மூவாயிரம் ஹெக்டேயராகும். 4908 ஏக்கர் பயிர் நிலங்கள் மின்னேரியாக் குளத்திலிருந்து நீரைப் பெறுகின்றன. மகாசேன மன்னனால் அமைக்கப்பட்டுள்ள 'கவுடுளு' குளத்திற்கும் மின்னேரியாக் குளத்திலிருந்து வெட்டப்பட்ட 6 மைல் நீளம் கொண்ட ஓடையினால் நீர் பெறப்பட்டுள்ளது.

எலஹெர, மின்னேரி, கந்தளாய், கவுடுளு, கிரிதல ஓடைப் பாதைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய நீர்ப்பாசனத் திட்டங்களாகும். இந்த திட்டங்களுக்கு நீர் 'அம்பன்' கங்கையின் துணைக் கங்கையான 'களு' கங்கையின் ஹத்தொட்ட ஆறு ஊடாகவே பெறப்பட்டன.

## மின்னேரிக் கடவுள்


மகாசேனனுக்கு பின்னர் பல மன்னர்கள் மின்னேரியாக் குளத்தை புனரமைத்துள்ளனர். இரண்டாம் சேன மன்னன் அதில் வான்கதவுகளை அமைத்ததாக வரலாற்றுக் கதைகள் குறிப்பிடுகின்றன. மகா விஜயபாகு மன்னன் எலஹெர ஓடையின் ஒரு பகுதியைப் புதுப்பித்தார். ஆக்கிரமிப்புகளின் பின்னர் ரஜரட்ட மற்றும் பிற நீர்ப்பாசனத்திட்டங்கள் போன்று மின்னேரியாக் குளமும் கவனிப்பாரற்று கைவிடப்பட்டது.

ஆனால், காலனித்துவ ஆட்சியின் போது பலதரப்பட்ட ஆங்கிலேய ஆட்சியாளர்களை மின்னேரியாக் குளம் கவர்ந்துள்ளது. ஜோன் டேவ் என்பவர் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'மின்னேரியாக் குளம் மிகவும் அழகானது. இதன் பெரும் பரப்பளவைப் பார்க்கையில் இதனை வாவி என்று அழைப்பதே பொருத்தமானதாகும். செயற்கையானதாக இருப்பினும் அணைக்கட்டி நீர் அடக்கி வைத்திருப்பதன்படி நோக்கினால் அது உண்மையில் ஓர் குளமாகும்''


பராக்கிரம சமுத்திரம்


கிரிதல குளம்




அம்பன் கங்கைக்கு குறுக்காக உள்ள அணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிய குளங்கள்



அம்பன் கங்கையின் பழைய சிதைவுகள்

## டேவ் கண்ட இலங்கை
### எச்.எம்.சோமரத்ன

1848 இல் மின்னேரியாவுக்கு சென்ற எமர்சன் டெனன்ட் வேகன்ந்த் அங்கு இருக்கும் அற்புதமான இயற்கை அழகைப் பற்றி விபரித்துள்ளார். அணையின் புறத்தே அதிகளவு மரங்கள் இயற்கையாகவே வளர்ந்திருந்தன. இந்த அற்புதமான மின்னேரியாக் குளத்தைக் கட்டிய மகாசேன மன்னன் விவசாயிகளினால் கடவுளாகவே மதிக்கப்படுகின்றார்.

## கிரிதல குளம்

மலை அடிவாரத்தில் மிகவும் அழகிய 'கிரிதல' குளம் அமைந்துள்ளது. இரண்டாவது அக்கபோ மன்னன் கிரிதல வாபி மற்றும் கங்காதட வாபி என்ற பெயரில் இரண்டு குளங்களை அமைத்ததாக கூறப்படுகின்றது. இதில் கிரிதட வாபி என்பது கிரிதல் குளமாகும். 'எலஹெர' ஓடையிலிருந்தும் 'தலவத்து' ஓயாவிலிருந்தும் ஆரம்பிக்கும் இடைப்பட்ட ஓடையிலிருந்து கிரிதல குளத்திற்கு நீர் கிடைக்கின்றது. இதன் நீளம் நான்கரை மைல்களாகும். ஆறாயிரம் ஏக்கருக்கு அதிகமான வயல்வெளிகளுக்கு இதிலிருந்து நீர் கிடைக்கின்றது.

ஆர்.எல்.புரோகியர் என்பவர் கிரிதல குளம் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்,

'மின்னேரியாவிலிருந்து நான்கு மைல் தூரத்தில் பொலன்னறுவை செல்லும் பாதையில் 'கிரிதல' குளம் அமைந்துள்ளது. ஏழாம் நூற்றாண்டின் முதல் பாகத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது. மனிதனுக்கும் மகா வனாந்தரத்திற்கும் இடையில் சமர் நடந்த காலப்பகுதி அது. வனத்தை அடக்கு முறைப்படுத்தி குடியேற்றங்கள் விஸ்தரிக்கப்பட்டன.

விசாலமற்ற இந்த குளம் அழகிய நீர்த்தேக்கமாகும். மின்னேரியாக் குளத்திற்கு அண்மித்திருக்காவிட்டால் இதன் பெறுமதியும் முக்கியத்துவமும் பன்மடங்கு அதிகரித்திருக்கும். இது இரண்டாம் அக்கபோவினால் (கி.மு604-614) அமைக்கப்பட்டது. இந்த மன்னனின் ஆட்சிக்காலம் இவ்வளவு குறுகியதாக இருந்திருக்காவிடின் மகாசேனனுக்கு குளங்கள் அமைப்பதில் பெரும் போட்டியாளராக இந்த மன்னர் இருந்திருப்பார்.

**புரோகியர் கண்ட இலங்கை**
**அபய ஹேவாவசம்**




மின்னேரியாக் குளம்

## பராக்கிரம சமுத்திரம்

மழை நீரைத் துளியும் வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்ட பராக்கிரம மன்னன் அவரது ஆட்சிக்காலத்தில் அரிசி ஏற்றுமதியில் ஈடுபடும் அளவிற்கு விவசாயத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். அவர் 163 பெரிய குளங்களையும் 2376 சிறிய குளங்களையும் 3910 ஓடைகளையும் அமைத்தார் என்று வரலாற்றுக் கதைகளில் குறிப்பிடப்படுகின்றது. இவற்றில், பராக்கிரம சமுத்திரத்தில் நீர் நன்கு நிரம்பியிருக்கும்பொழுது அது சமுத்திரத்தைப் போன்றிருக்கும் என குறிப்பிடப்படுகின்றது.

## மூன்று குளங்கள்

தோபா வாவி, தும்புட்டுலு வாவி, எரமுது வாவி என்பனவற்றை இணைத்து பராக்கிரம சமுத்திரம் அமைக்கப்பட்டுள்ளது.







அம்பன் கங்கை

அங்கமெடில்ல என்ற இடத்தில் 'அம்பன்' கங்கையின் குறுக்காகக் கட்டப்பட்ட 'ஆகாயகங்கை' என்று பெயரிடப்பட்ட ஓடையின் ஊடாக பராக்கிரம சமுத்திரத்திற்கு நீர் வழங்கப்படுகின்றது. இந்த ஓடையின் நீளம் 16 மைல்களாகும். மேலதிக நீர் கிரிதல குளத்திலிருந்து பெறப்பட்டதாகும். பராக்கிரம சமுத்திரத்திற்கு 7 வான்கதவுகளும் 11 ஓடைகளும் உள்ளன என்று வரலாற்றுக் குறிப்புகளில் குறிப்பிடப்படுகின்றன. இந்த ஓடைகளுக்கு இந்தியப் பெயர்களே சூட்டப்பட்டுள்ளன. ஹேமவத்தி, நீலவாகினி, துங்கபத்தா, சரஸ்வதி, நெரங்ஜரா என்ற பெயர்கள் அதற்கு உதாரணங்களாகும்.



குளத்தின் எல்லையில் வரையப்பட்டுள்ள சின்னங்கள்

## தரையில் கடல்

பராக்கிரம சமுத்திரத்தின் அணையின் நீளம் 12.38 மீற்றர்களாகும். அதன் உயரம் 9.45 மீற்றர்களாகும். நீரில் உள்ள தரையின் பரப்பளவு 2539.50 ஹெக்டேயராகும். குளம் நிரம்பியிருப்பின், 109,000 ஏக்கர் அடி நீர் இருக்கும். இதன் நீரினால் விவசாயம் செய்யக்கூடிய நீரின் அளவு 19,632 ஆகும். நீர் உள்ளடக்க அளவு 28 மைல்களாகும். இப்பொழுது மூன்று பிரதான வான் கதவுகள் இங்கு இயங்குகின்றன.

கிழக்கில் பொலன்னறுவை நகருக்கும் தெற்கில் கலஹகல கிராமத்திற்கும் வடக்கில் ஹபரண பிரதேசத்திற்கும் மேற்கில் சுதுகந்த மற்றும் நெபதில்ல மலைப்பகுதிக்கும் எல்லையாக உள்ள 'மகாவலி' ஆற்றின் கரைப்பகுதியில் பராக்கிரம சமுத்திரம் உள்ளது. இந்த சமுத்திரத்தின் அணை எல்லைகளில் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் சிங்கள மற்றும் சமஸ்கிருத மொழிகளில் பராக்கிரம மன்னன் இந்த பாரிய குளத்தை அமைத்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத் தேவைக்கான மாற்று எரிசக்தி

எமது அன்றாட எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்வதில் விறகு, கனிய எண்ணெய், மின்சாரம், உயிரியல் வாயு, சூரிய வெப்பம் போன்ற எரிசக்தி மூலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனினும், இவை அனைத்திலும் அதிகம் பெறுமதி வாய்ந்தது மின்சாரமே. ஒளி ஏற்றுதல், உணவு சமைத்தல், இயந்திரங்களை இயக்கச் செய்தல் உட்பட மேலும் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யக்கூடிய ஆற்றல் மின்சாரத்திற்கு உண்டு. அதனால், உலகம் முழுவதும் மின்சாரத்திற்கான கேள்வியும் அதற்கான செலவுகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன.


எனவே, இத்தகைய நெருக்கடியை சமாளிக்க மாற்று எரிசக்திப் பயன்பாடுகளை நாடிச் செல்ல வேண்டியது காலத்தின் தேவையாகும். உதாரணமாக, தற்போது உலகில் கனிய எண்ணெய் வளங்களுக்கு உரிமை கொண்டாடும் பல நாடுகள் யுத்தங்களுக்கு முகம் கொடுத்தவண்ணம் இருக்கின்றன. இந்த நிலையில் கனிய எண்ணெய் வளத்திற்கு உரிமை கொள்ளாத நாடுகள் அந்த சக்தி வளத்தில் தங்கி இருப்பதோ அல்லது தங்களுக்கு உரித்தான ஏதாவது ஒரு சக்தி வளத்தில் தங்கி இருப்பதோ ஆபத்தானதாகும். ஆகவே, பல்வேறு சக்தி வளங்கள் குறித்து தமது கவனத்தை செலுத்தினால் எதிர்கால எரிசக்தி நெருக்கடிக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கலாம்.


சிறு மின் உற்பத்தி நிலையம்

## இலங்கையின் எதிர்காலத்திற்கு மாற்று எரிசக்தி

### காற்று மின்சக்தி

இலங்கையிலும் மேற்குறித்த நிலைமையே காணப்படுகின்றது. மின்சக்தி உற்பத்தியில் நீர்மின் உற்பத்தியையே நாம் பெருமளவு நம்பி இருக்கின்றோம். எனவே,



சில ஐரோப்பிய நாடுகளுக்கிடையே காற்று மின்சக்தி உற்பத்திக்கும் பரிமாற்றத்திற்குமென திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ள விதம்

நாம் மின்சக்தி உற்பத்தியில் மாற்று மின்சக்தி உருவாக்கத்தின் பக்கம் கவனத்தைச் செலுத்துவது காலத்தின் தேவையாகும். அந்தவகையில் இலங்கையில் தற்பொழுது மாற்று மின்உற்பத்தி வளமாக காற்றுச் சக்தியே இனங்காணப்பட்டுள்ளது.

### சூரிய ஒளியின் பயன்பாடு

நீரைக் கொதிக்க வைக்கவும் உணவை சமைப்பதற்கும் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்துவது மிகவும் லாபகரமானதாகும். நேபாளம் போன்ற நாடுகளில் இத்தகைய முறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் பெருந்தொகையான மின் அலகுகளை சேமிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையிலும் ஹோட்டல் கைத்தொழில்களிலும் வீடுகளிலும் சூரிய வெப்பத்தின் மூலம் நீரை சூடாக்கும் முறையை கையாள்வது மிகவும் பொருத்தமானதாகும்.

சூரிய வெப்பத்தினால் மின்சாரம்




உயிரியல் வாயு அலகொன்று

### உயிரியல் வாயுவின் பயன்பாடு

கிராமப் பகுதிகளைப் பொறுத்தவரையில் இரவு நேரங்களில் மின்குமிழ்களை எரியச் செய்வதற்கே மின்சாரம் அதிகளவு பயன்படுத்தப்படுகின்றது. இங்கு விவசாய பின்புலத்தைக்கொண்ட கிராமங்களிலுள்ள வீடுகளில் உயிரியல் வாயு மின்பிறப்பாக்கி அலகினை அமைத்துக்கொள்வது மிகவும் லாபகரமானதாக அமையும். இதன்மூலம் உணவைச் சமைக்கவும் இரவு நேரங்களில் வீடுகளில் ஒளி ஏற்றவும் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

### சமையலறைக்கான புதிய அடுப்பு

நகர்ப்பகுதிகளில் வாழ்பவர்கள் பல்வேறு காரணங்களின் நிமித்தம் உணவுகளை சமைப்பதற்கு மின்சாரத்தையும் L.Pவாயுவையும் பயன்படுத்துகின்றனர். எனினும், இதைவிட சோறு சமைக்கும் சிரட்டை அடுப்பு, விறகு வாயு அடுப்பு என்பனவற்றைப் பயன்படுத்துவது சிறந்த மாற்றுவழியாகும். இதன்மூலம் மாதாந்தம் சுமார் 15 மின் அலகுகளை சேமிக்க முடியும்.


நர்ட் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள சிரட்டையைப் பயன்படுத்தி உணவு சமைக்கும் அடுப்பு.

### கழிவுப் பொருட்களிலிருந்து மின் உற்பத்தி

தேசிய மின்சக்தி உற்பத்திக்கென சூரிய வெப்பம், கடலலை போன்றவற்றைப் பயன்படுத்துவது அதிக செலவினத்தை ஏற்படுத்தும். ஆகவே, குப்பைகளை எரித்து மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும். இம்முறை பல்வேறு நாடுகளிலும் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எனினும், இலங்கையின் நகரப்பகுதிகளில் சேரும் குப்பைகளில் 58% ற்கும் அதிகமாக ஈரப்பதன் காணப்படுகின்றது. எவ்வித முகாமைத்துவமும் இல்லாமல் ஈரப்பதனுடன் கூடிய கழிவுப்பொருட்களால் மின்சக்தியை உற்பத்தி செய்யும்பொழுது அதனை எரிப்பதற்காக பெருந்தொகையான மின் அலகுகள் செலவாகும். அது லாபகரமான மின் உற்பத்தி முறையல்ல. ஆனால், இவ்வாறான கழிவுப் பொருட்களை சிறந்த முறையில் முகாமைத்துவப்படுத்தி, அவற்றிலிருந்து மின் உற்பத்தியை மேற்கொண்டால் ஏலவே உள்ள மின் உற்பத்திக்கான செலவினை பெருமளவில் குறைக்கலாம்.

### கூட்டுச்செயற்பாட்டின் அவசியம்

எதிர்கால மின்சக்தி நெருக்கடிக்கு தீர்வுகாணும் பொருட்டு சாதகமான மீளுருவாக்க மின்சக்தி பயன்பாட்டுக்காக தெற்காசிய நாடுகள் கூட்டாகச் செயற்பட வேண்டியது அவசியம். அதன்படி, நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளில் நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்கள் அதிகளவில் உள்ளன. பங்களாதேஷானது இயற்கை வாயு வளம் நிறைந்ததொரு நாடாகும். அவ்வாறே பாகிஸ்தான், இந்தியா, மியன்மார் போன்ற தெற்காசிய நாடுகளும் தம் வசமுள்ள சக்திவளங்களைப் பரிமாற்றம் செய்துகொள்வதன் மூலம் எதிர்கால எரிசக்தி நெருக்கடிக்கு இலகுவான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### எரிசக்தியை மீதப்படுத்தியவாறு உணவு வகைகளை சமையுங்கள்

உணவு வகைகளைத் தயாரிக்கும் பொழுது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்டால் அதிகளவான மின்சக்தியை சேமிக்கலாம்.

* கிழங்கு வகைகளை வாங்கும்போது சிறிய கிழங்குகளை தெரிவு செய்யுங்கள். அதனால், வேக எடுக்கும் காலமும் நுகரும் எரிபொருளின் அளவும் குறையும்.
* தானிய வகைகளை அவிப்பதற்கு முன்னர் நீண்டநேரம் நீரில் நன்கு ஊறவைக்க வேண்டும். இதன்பின்னர், வேக வைக்கும்போது அவை விரைவில் வெந்துவிடும்.
* அரிசி மற்றும் தானிய வகைகள், முட்டை, கிழங்கு வகைகளைச் சமைக்கும்போதும் தேநீர் தயாரிக்கும்போதும் தேவையான அளவு மாத்திரம் நீரைப் பயன்படுத்துங்கள்.
* உணவுகளைச் சமைக்கும்போது பாத்திரத்தை ஒரு மூடியால் மூடுவதன் மூலம் நீராவி வெளியேறுவது தடைப்படுகின்றது. அதனால், உணவு சமைத்தல் விரைவடைகின்றது.
* இயன்றளவு கெரட், வெள்ளரிக்காய், வல்லாரை போன்றவற்றை பச்சையாக தயாரித்து உட்கொள்ளுங்கள்.
* உணவைச் சமைப்பதற்கு ஒடுங்கிய பாத்திரங்களைத் தெரிவு செய்யுங்கள்.




## வாரந்தோறும் ரூபா 40,000 வெல்லுங்கள்!

'தூர நோக்குவோம்-ஒன்றிணைவோம்-மின்சாரத்தை சேமிப்போம்' எனும் தொனிப்பொருளில் 'விஜய்'யில் வாரம்தோறும் வெளியாகும் கட்டுரைத்தொடரில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளை அனுப்பி, வாரந்தோறும் தலா ரூபா 1000.00 வீதம் 40 பணப்பரிசுகளை வெற்றி கொள்ள 40 பேர்களுக்கு வாய்ப்புண்டு.

### இவ்வார வினாக்கள்

1. **இலங்கையில் தற்போது மாற்று மின்உற்பத்தி வளமாக இனங்காணப்பட்டுள்ள சக்தி எது?**
2. **நகர்ப்புற வீடுகளில் உணவுகளை சமைப்பதற்கு அதிகம் பயன்படுத்தும் எரிசக்திகள் 2 தருக.**

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**


மின்சாரத்தை சேமிப்போம்-6,
'விஜய்'
த.பெ இல: 2037,
கொழும்பு.

உங்கள் பெயர், முகவரியை ஆங்கிலத்தில் எழுதவும்

கேள்வி இல-04 இன் பரிசுபெறுவோர் விபரம் 20 ஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தையும் நகரத்தையும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்போம்



இந்த ஆண்டு ஒக்டோபர் 5 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலகக் குடியிருப்பு தினத்தின் தொனிப்பொருள் 'எமது நகரத்தின் எதிர்காலத்தைத் திட்டமிடுவோம்' என்பதாகும்.

உலக சனத்தொகையில் கணிசமான எண்ணிக்கையிலானவர்கள் நகரப்பகுதிகளில் வசிக்கின்றனர். அதனால், ஏற்படும் பிரச்சினைகளும் அதிகமாகும். இதனால், நகரத்தை திட்டமிட்டு கட்டியெழுப்புதல் அவசியமாகும். இதன்போது, அனர்த்தங்கள் ஏற்படாத பகுதிகளாக நகரங்களைக் கட்டியெழுப்புதலும் அவசியமாகும். இயற்கை அனர்த்தங்கள் மட்டுமன்றி மனிதரால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களும் நகர வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக உள்ளன. இயற்கை அனர்த்தங்களை எம்மால் தடுத்து விடமுடியாது. எனினும், அவ்வாறு ஏற்படும் அனர்த்தங்களின் பாதிப்பைக் குறைக்க நடவடிக்கை எடுக்கமுடியும்.

## இயற்கை அனர்த்தப் பாதிப்பைக் குறைத்தல்

நாடுகள் அனைத்திலும் இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்துள்ளமையில் சமூக,பொருளாதாரக் காரணிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளன. நகரமயமாதலினால் சூழல் பிரச்சினைகள் அதிகரித்துள்ளமையும் இயற்கை அனர்த்தங்களுக்கு வழியேற்படுத்தியுள்ளன. மனிதரால் ஏற்படுத்தப்படும் சூழல் பாதிப்புகளினால் தற்போது வெள்ளப்பெருக்கு, மண்சரிவு ஆகிய இயற்கை அனர்த்தங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன.அத்துடன்,கடலரிப்பு,ஆறுகள் அரித்துச் செல்லப்படுதல் என்பனவும் பெரும்பாலும் நகரமயமாதலின் மற்றுமொரு விளைவாகும். சூழல் மாசடைதலும் மற்றுமொரு பிரச்சினையாகும். வசதிகள் நிறைந்த சிறந்த வாழ்க்கைத் தரத்திற்காக கிராமங்களிலிருந்து நகருக்குள் வசிக்க வரும் பலர் குறைந்த வருமான மட்டத்தைக் கொண்டவர்களாவர். அதிக செலவைக் கொண்ட நகர வாழ்க்கையில் ஈடுபடும்போது அதிலுள்ள சிரமங்களினால் அவர்கள் ஒழுங்கற்ற வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கின்றனர். இதுவும் சூழல் மாசடைதலுக்கு ஒரு காரணமாகும்.



## சூழலைப் பாதுகாக்கும் நகரம்

நகரைத் திட்டமிடும் போது சூழல் மாசடைவைக் குறைக்கும் வழிவகைகள் குறித்து அவதானம் செலுத்துதல் அவசியமாகும். சூழல் மாசடைவு குறையும்பொழுது இயற்கை அனர்த்தங்களும் குறைவடையும். கட்டட நிர்மாணங்களின் போது, மரங்கள் சேதப்படுத்தப்படுவது பெருமளவில் நிகழ்கின்றன. கிராமங்களும் நகரங்களும் மரங்கள் அற்ற கொங்கிறீட் பகுதிகளாக இருப்பதனைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது எமது கடமையாகும். சூழல் மாசடையும் பொழுது நாமும் பாதுகாப்பற்றவர்களாகின்றோம். அதனால், நகரத்தையும் கிராமத்தையும் அபிவிருத்தி செய்யும்போது சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுத்த முயலக்கூடாது. சூழலைப் பாதுகாத்து இயற்கை அனர்த்தங்கள் அற்ற கிராமங்களையும் நகரங்களையும் கட்டியெழுப்புவோம்!



## உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு

## 'எமது நகரத்தின் எதிர்காலத்தை திட்டமிடுவோம்'

## சித்திரம் வரைவோம் - கட்டுரை எழுதுவோம் - பரிசுகளை வெல்வோம்!

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களுக்கான சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டியொன்றை நடத்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தப் போட்டி 'விஜய்' மற்றும் 'விஜய' (சிங்களம்) பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் நடைபெறவுள்ளது. 'எமது நகரத்தின் எதிர்காலத்தை திட்டமிடுவோம்' என்ற பிரதான தொனிப்பொருளின் கீழ்;

✱ வாழ்வதற்கு உகந்த சுற்றுச் சூழலுடன்கூடிய நகரம் ஒன்றைத் திட்டமிடுதல்.

✱ நகரத்தின் வசதிகளை கிராமத்திற்குக் கொண்டு சென்று கிராமத்தை அபிவிருத்தி செய்தல்.

✱ இயற்கையாக மற்றும் மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட நாம் வாழும் கிராமத்தையும் நகரத்தையும் ஆபத்துக்கள் அற்ற பிரதேசமாக மாற்றுதல் ஆகிய விடயங்களை அடிப்படையாக வைத்து, சித்திரம் மற்றும் கட்டுரைகளை அனுப்புதல் வேண்டும்.

### சித்திரப் போட்டி

'ஏ' பிரிவு (1 ஆம் தரத்திலிருந்து 5 ஆம் தரம் வரை)
'பி' பிரிவு (6 ஆம் தரத்திலிருந்து 10 ஆம் தரம் வரை)
'சி' பிரிவு (11 ஆம் தரத்திலிருந்து 13 ஆம் தரம் வரை)

மேற்கூறப்பட்ட மூன்று பிரிவுகளின் கீழ் சித்திரப்போட்டி நடைபெறும். 17x22 அங்குலம் அளவிலான சுவரொட்டி கடதாசியில் சித்திரம் வரையப்படல் வேண்டும். சித்திரம் வரைவதற்கு பெஸ்டல், நீர்ச்சாயம், நிறப் பென்சில் ஆகியவற்றில் எந்தவொரு நிற உபகரணத்தையேனும் பயன்படுத்தலாம்.

### கட்டுரைப் போட்டி

✱ கட்டுரைப் போட்டி 'ஏ' பிரிவு' (6 ஆம் தரத்திலிருந்து 10 ஆம் தரம் வரை) மற்றும் 'பி' பிரிவு (11 ஆம் தரத்திலிருந்து 13 ஆம் தரம் வரை) ஆகிய பிரிவுகளின் கீழ் மட்டுமே நடைபெறும்.

✱ 'ஏ' பிரிவின் கீழ் கலந்துகொள்ளும் போட்டியாளர்களின் கட்டுரைகள் 1000 சொற்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். 'பி' பிரிவில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களின் கட்டுரைகள் 1500 சொற்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

### பரிசுகள்

நாட்டின் எந்தவொரு பகுதியிலிருக்கும் பாடசாலை மாணவர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாம். குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின் அடிப்படையில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு 2009 ஒக்டோபர் 5 ஆம் திகதி நீர்கொழும்பில் நடைபெறவுள்ள விழாவில் வெற்றியாளர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் வருமாறு;

முதலாம் இடம் - பணப்பரிசாக ரூபா 10,000 உடன் பரிசு மற்றும் சான்றிதழ்.
இரண்டாம் இடம் - பணப்பரிசாக ரூபா 7,500 உடன் பரிசு மற்றும் சான்றிதழ்.
மூன்றாம் இடம் - பணப்பரிசாக ரூபா 5,000 உடன் பரிசு மற்றும் சான்றிதழ்.
திறமைப் பரிசு - தெரிவுசெய்யப்பட்ட ஐவருக்கு திறமைப் பரிசாக ரூபா 2000 பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.

✱ சகல பிரிவுகளிலிருந்தும் 100 சிறந்த சித்திரம் மற்றும் கட்டுரைகள் தெரிவுசெய்யப்பட்டு, அந்த படைப்புகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### படைப்புகளை ஏற்றுக்கொள்ளல்

✱ போட்டியாளர்களின் சித்திரம் அல்லது கட்டுரை என்பனவற்றை அதிபரின் அத்தாட்சியுடனான விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து, 2009 செப்டெம்பர் 11 ஆம் திகதிக்கு முன்னர் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

✱ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்றதொரு விண்ணப்பப்படிவத்தை A4 அளவுடைய தாளொன்றில் தயாரித்து, சித்திரம்/கட்டுரையுடன் அவசியம் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

### சித்திரம் அல்லது கட்டுரை அனுப்பப்படவேண்டிய முகவரி:

உதவி முகாமையாளர்,
தகவல் மற்றும் விரிவாக்கல் பிரிவு,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
7 ஆவது மாடி, சேர் சித்தம்பலம் ஏ காட்னர் மாவத்தை, கொழும்பு-02.
மேலதிக விபரங்களைப் பெறவிரும்பின் 011-2447207 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

### 2009 உலக குடியிருப்பு தினம்
பாடசாலை சித்திரம்/கட்டுரைப் போட்டிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்

பிரிவு [ ]

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்: ..............................
2. கற்கும் பாடசாலையின் பெயர் மற்றும் தரம்: ..............................
..............................
3. பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் மற்றும் தொலைபேசி இலக்கம்: ..............................
4. சொந்த முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்: ..............................
5. பிறந்த திகதி: ..............................
6. 2009 செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு வயது: ..............................

இந்த விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சித்திரம்/கட்டுரை எனது சொந்தப் படைப்பு என்பதனை உறுதிப்படுத்திக்கொள்கின்றேன். இந்தப் போட்டியின் அனைத்து நிபந்தனைகளுக்கும் ஏற்ப எனது படைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்தப் போட்டியின் நடுவர் குழாமினால் எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்பதனை தெரியப்படுத்துகின்றேன்.

விண்ணப்பதாரியின் பெயர்: ..............................

திகதி: .............................. கையொப்பம்: ..............................

இந்த விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சித்திரம்/கட்டுரை அவரது சொந்தப் படைப்பு என்பதனையும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் உண்மை என்பதனையும் இதனூடாக உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .............................. அதிபரின் கையொப்பம்: ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசு:** சோஷலிச அரசு, தனிக்கட்சி கம்யூனிச அரசு.
**தேசிய பெயர்:** Zhonghua Renmin Gonghegou (சீன மக்கள் குடியரசு).
**தாபிக்கப்பட்டது:** சீன மக்கள் குடியரசாக - 1949 ஒக்டோபர் 1.
**தேசிய விடுமுறை தினம்:** ஒக்டோபர் 1 ஆம் திகதி.
**மக்கள் பிரதிநிதிகள் கூடும் இடம்:** தேசிய மக்கள் கொங்ரஸ்.
**ஜனாதிபதி** (2003): ஹு ஜின்டாவோ.
**பிரதமர்** (2003): வென் ஜியாபோ.

## புவியியல்

நாட்டின் பெரும்பாலான பகுதிகள் மலைப்பிரதேசமாகும். உலகின் உயர்ந்த மலையாகிய இமயமலையின் ஒரு பகுதியான டியன் ஷான் மற்றும் பமீர் மேட்டுநிலத்தின் ஒரு பகுதியும் இங்குதான் அமைந்துள்ளன.

மூன்று பிரதான ஆறுகள் இங்கு பாய்கின்றன. 2109 மைல் (5464 கி.மீற்றர்) நீளமான ஹுவாங்ஹே எனப்படும் மஞ்சள் நதி, உலகின் மூன்றாவது நீளமான நதியாகிய யாங்சே மற்றும் ஸுஜியாங் நதி என்பனவே அவையாகும்.

# சீனா







தேசிய இலச்சினை

**அமைவிடம்:** ஆசியாக் கண்டத்தின் நடுப் பகுதியில் இருந்து கிழக்குக் கரை வரை பரந்து செல்லும் ஒரு நாடு. **வடகிழக்கு**- வடகொரியா; **வடக்கு**-மொங்கோலியா, ரஷ்யா; **மேற்கு**- ரஷ்யா; **தெற்கு**- ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, நேபாளம், பூட்டான், மியன்மார், லாவோஸ் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன.

**தலைநகரம்:** பீஜிங்.

**பெரிய நகரங்கள்:** ஷங்காய், வூஹாங், ஷென்யாங், குவான்ஸு, ஹேர்பின், சியான், ச்சுங்கிங், ச்செங்கு, ஹொங்கொங்.

**மொத்த நிலப்பரப்பு:** 9,326,411 ச.கி.மீற்றர்; **நிலப்பிரிவுகள்:** 23 மாகாணங்கள், 5 அதிகாரபூர்வ பிரிவுகள், 4 நகராட்சி மையங்கள்.

**மக்கள் தொகை** (2009): 1,338,612,968.

**நாணய அலகு:** யுவான்/ரென்மின்பி.

**மொழிகள்:** சீன மொழிகள் (மெண்டரின்/புட்டோங்குவா), யுயி, வூ, மின்பே, மின்னன், ஷியாங், சென், ஹக்கா மற்றும் சில சிறுபான்மை மொழிகள்.

**இனங்கள்:** ஹேன் சீனர் 91.9%, ஸுவேங், உய்கர், ஹுய், யி, திபெத்தியர், மையாவோ, மஞ்சு, மொங்கோலியர், பூயி, கொரியர் மற்றும் ஏனைய தேசிய இனங்கள் - 8.1%.

**சமயங்கள்:** பெருமளவில் நாத்திகம்; தவிர தாவோயிஸம், பௌத்தம், கிறிஸ்தவம் 3%-4%, இஸ்லாம் 1%-2%.

**தேசிய சின்னங்கள்: பறவை**-சிட்டுக்குருவி, **மிருகம்**-பெரிய பென்டா, **மலர்** - Plum Blossom (Prunus Mei), **மரம்** - Ginseng, **விளையாட்டு** - மேசைப்பந்து.


தடுக்கப்பட்ட நகர்

## தேசிய கீதம்

Qilai! Buyuan zuo nuli de renmen!
Ba women de zuerou, zhucheng women xin de changcheng!
Zhonghua minzu daoliao zui weixian de shihou. ......... என ஆரம்பமாகின்றது.

**இணையத்தளக் குறியீடு:** .cn
**சர்வதேச தொலைபேசி இலக்கம்:** +86
**எழுத்தறிவு வீதம்** (2006): 90.9%.

**காலநிலை:** தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் அதிக வெப்பமும் வடக்கு மற்றும் தூர வடக்கு பிரதேசத்திலும் தென்மேற்கு இமயமலைப் பிரதேசத்திலும் பனியால் உறைந்த குளிர் காலநிலையும் நிலவுகின்றது.

## வரலாறு

கிறிஸ்து பிறப்பதற்கு 5000 வருடங்களுக்கு முற்பட்ட நாகரிகம் கொண்டது. 19 ஆம் நூற்றாண்டில் ரஷ்யா, பிரித்தானியா, போர்த்துக்கல் போன்ற நாடுகளின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியது. 1911 இல் ஸன்யாட்ஸென்னின் தலைமையில் குடியரசானது. தொடர்ந்து உள்நாட்டுக் கலகம் நிலவியது. இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானின் தாக்குதலுக்கு உட்பட்டது. 1949 இல் மாவோ சேதுங் தலைமையில் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப் பற்றினர். 1959 இல் திபெத்தில் சீன ராணுவம் தாக்குதலை நடத்தியது. 1962 இல் இந்தியாவுடன் யுத்தத்தில் ஈடுபட்டது. 1966 இல் ஆரம்ப மான புரட்சி சீனாவில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது. 1976 இல் மாவோவின் மறைவுக்குப்பின் அரசியல் மற்றும் ஆட்சி அரங்கில் மிகப்பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. எனினும், தற்போதும் ஆட்சி அதிகாரம் கம்யூனிசக் கட்சியின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

## கலாசாரம்

பழங்கால சீனக் கலாசாரமானது, தற்போதைய கம்யூனிச மற்றும் நிகழ்கால மேற்கத்திய கலாசாரங்களுடன் பின்னிப்பிணைந்து காணப் படுகின்றது. தவிர, இன்றளவில் உலகின் ஏனைய பாகங்களுடன் மிக நெருங்கிய கலாசார தொடர்புகளைக் கொண்டுள்ளது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006):பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் - 350.43 மில்லியன்; கையடக்கத் தொலைபேசி - 437.48 மில்லியன்.

**வானொலி நிலையங்கள்**(1998):AM 369,FM 259,SW45.
**தொலைக்காட்சி நிலையங்கள்:** 3240.
**இணையத்தளங்கள்** (2006): 232,780; இணையத்தள பாவனையாளர்கள்: 123 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரப் பாதைகள்** (2002): 71,898 கி.மீற்றர்,
**பெருந்தெருக்கள்:** மொத்த நீளம் 1870661 கி.மீற்றர்,
**நீர் வழிப்போக்குவரத்து** (2003): 123964 கி.மீற்றர்,
**துறையும் துறைமுகமும்:** டேலியன், குவாங்ஸு, நான்ஜிங், நிங்போ, குயிங்டாவோ, ஷாங்காய் என்பன.
**விமான நிலையங்கள்** (2006): 486.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கைக்கேற்ற நிலம்-15%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** நெல், சோளம், கோதுமை, உருளைக்கிழங்கு, நிலக்கடலை, தேயிலை, பார்லி, அப்பிள், பருத்தி, தாவர எண்ணெய் விதை, பன்றி, மீன்.
**கைத்தொழில்கள்:** சுரங்கத்தொழில் அபிவிருத்தி, விளையாட்டுப் பொருட்கள், இலத்திரனியல் உபகரணங்கள், உணவுப் பொருட்கள், போக்குவரத்து சாதனங்கள், உதிரிப்பாகங்கள் உட்பட இன்னும் பல. **இயற்கை வளங்கள்:** நிலக்கரி, இரும்புருக்கு, பெற்றோலியம், இயற்கை வாயு, தகரம், மெங்கனீஸ் மற்றும் பல. **ஏற்றுமதிகள்:** இயந்திரங்களும் இயந்திர உதிரிப்பாகங்களும், பிளாஸ்டிக் பொருட்கள், மூக்குக் கண்ணாடிகள் மற்றும் பல. **இறக்குமதிகள்:** இயந்திரங்களும் இயந்திர உதிரிப்பாகங்களும், எண்ணெய் மற்றும் கனிய எரிபொருட்கள்.
**முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** ஐக்கிய அமெரிக்கா, ஹொங்கொங், ஜப்பான், தென் கொரியா, ஜேர்மனி, தாய்வான் என்பன.


டியன்டான் கோயில்

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

*** சீனப்பெருஞ்சுவர்**
*** தடுக்கப்பட்ட நகர்:-** பீஜிங் நகரின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ளது.
*** டியன்டான்:** சுவர்க்கத்தின் கோயில் எனப்படுகின்றது. புராதன சீனச் சக்கரவர்த்திகளால் வழிபாட்டிற்காக கட்டப்பட்டது. *** யோங்ஹிகோங்:** பாரிய மாளிகை (பீஜிங்).
*** லுஷான் மலை:** சீனாவின் புகழ்பூத்த மலை.
*** மணி மற்றும் பேரிகைக் கோபுரம் * பஞ்சியுயான் சந்தை * கோடை மாளிகை * டான்ஷி கோயில்** உட்பட மேலும் பல முக்கிய சுற்றுலா மையங்களும் சீனாவில் உள்ளன.


பீஜிங் நகர்




தேசிய மக்கள் கொங்ரஸ்


தென் சீனாவில் உள்ள விவசாய நிலங்கள்

ஜனாதிபதி

பிரதமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 4 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் 2 (தொடர்ச்சி...)

பெயர்: ....................................   நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

### சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம்

01. பின்வரும் பிராணிகளின் பெயர்களைத் தெரிந்து எழுதுக.

தும்பி, பச்சிலைப்பூச்சி, சிலந்தி, கும்பிடுபூச்சி, அந்துப்பூச்சி

(1) (2) (3) (4) (5)



.................... .................... .................... .................... ....................

02. சரியான விடையினை எழுதுக.

(1) ஆகாயத்தோட்டி என அழைக்கப்படும் பறவை எது? ....................

(2) அசேதனப் பசளை இரண்டு தருக. ....................

(3) உணவுகளை சுவையூட்டுவதற்குப் பயன்படும் இலைகள் 2 தருக. ....................


(4) உணவு சமைக்கும் முறைகள் 2 தருக. ....................

(5) பாண் பழுதடைந்துள்ளது என்பதை எவ்வாறு அறிவீர்? ....................

*(5X2=10 புள்ளிகள்)*

03. பூவின் பகுதிகளைக் குறிப்பிடுங்கள்.

1. ....................
2. ....................
3. ....................
4. ....................
5. ....................




*(5X2=10 புள்ளிகள்)*

04. ஆங்கிலச் சொல் எழுதுக.

1. பூ:- ....................   2. நேரம்:- ....................
3. அன்னாசி:- ....................   4. மாம்பழம்:- ....................
5. சோறு:- ....................

*(5X2=10 புள்ளிகள்)*

05. சிங்களச் சொல்லின் தமிழ்க் கருத்தை எழுதுக.

1. dhதஹய:- ....................   2. சீயா:- ....................
3. கு(க்)குளா:- ....................   4. ஸிஷ்யாவ:- ....................
5. பு(ட்)டுவ:- ....................

*(5X2=10 புள்ளிகள்)*

### பொது அறிவு, பொது விவேகம், கட்டுரை

01. (1) வியர்க்காத விலங்கு எது? ....................

(2) நீர் அருந்தாத பிராணி எது? ....................

(3) உலகின் மிக நீளமான சுரங்கப் பாதை எங்கு உள்ளது? ....................


(4) இலங்கையின் மிக நீளமான நதி எது? ....................

(5) இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் எது? ....................

*(5X2=10 புள்ளிகள்)*

02. வேறுபட்ட படத்தின் கீழ்க் கீறிடுக.

1)
2)
3)
4)
5)



*(5X2=10 புள்ளிகள்)*




03. அடுத்து வரும் எண்களை எழுதுக.

1) [2 / 4 8] [3 / 6 12] [4 / 8 16] [5 / 10 -]

2) [5 / 10 7] [6 / 12 9] [7 / 14 11] [8 / 16 -]

3) [8 / 6 12] [10 / 8 16] [12 / 10 20] [14 / 12 -]

4) [4 | 2 | 6] [9 | 3 | 12] [16 | 4 | 20] [- | 5 | 25]

5) [2 | 1 | 9] [3 | 2 | 25] [4 | 3 | 49] [5 | 4 | -]

*(5X2=10 புள்ளிகள்)*

04. எனது பாடசாலை பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக.

....................
....................
....................
....................
....................
....................
....................

*(20 புள்ளிகள்)*

**மாதிரி வினாத்தாள் 2 இன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

## தரம் 4 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்-1 இன் விடைகள்

*(ஓகஸ்ட் 26, செப்டெம்பர் 2 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

### தமிழ்மொழி

01. (1) பூச்செடிகள் (2) காய்கறிகள் (3) பூ, காய்கறி, பழங்கள், கீரைகள்.
(4) வீட்டுத்தோட்டம் (5) கத்தரி, வெண்டி, தக்காளி, புடோல், பாகல்.

02. (1) விலாசம் (2) நெருப்பு/தீ

03. (1) வெந்நீர் (2) கோழை

04. (1) குறத்தி (2) உத்தமி

05. (1) நூலகம் (2) பாடப்பகுதி

06. (1) மண்+அரிப்பு (2) மண்+கலம்

07. (1) என்னைத் தெரியாதவர் யாரும் இருக்கமுடியாது.
(2) பக்கத்து வீட்டுக்காரரால் எதுவுமே பேச முடியவில்லை.
(3) உங்கள் ஊக்கத்தைக் கண்டு நானும் மகிழ்ச்சி அடைகின்றேன்.
(4) அனைவரும் கல்வி கற்க வேண்டும்.
(5) விளையும் பயிரை முளையிலே தெரியும்.

### கணிதம்

08. (1) இருபத்தைந்து (2) முந்நூற்று ஆறு (3) நூற்று ஐம்பத்தைந்து
(4) ஆயிரத்து ஐந்நூற்று அறுபத்து இரண்டு (5) ஆயிரத்து எட்டு

09. (1) 47 (2) 1549 (3) 508 (4) 5204 (5) 8001

10. (1) 24 (2) 48 (3) 18 (4) 50 (5) 35

11. (1) 7m 15cm (2) 6m 50cm (3) 1m 55cm (4) 8m 3cm (5) 2m 5cm

12. (1) 975 (2) 196 (3) 876 (4) 396 (5) 996

### சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம்

01. (1) தென்னை (2) சூரிய ஒளி (3) தீக்கோழி (4) கொழும்பு (5) வள்ளம்

02. கள்ளிப்பூ, நாகலிங்கப்பூ, ஆவாரம்பூ, பிறைப்பூ, பட்டிப்பூ

03. 1. mother 2. milk 3. money 4. green 5. dog
6. cow 7. sister 8. hand 9. face 10. leg

04. (1) தாத்தா (2) லி(ப்)ப (3) (b)பத் (4) அல்மாரிய (5) கபுடா

### பொது அறிவு, பொது விவேகம், கட்டுரை

01. (1) கரப்பந்தாட்டம் (2) நாகமரம் (3) 11 பேர் (4) வலது பக்கத்தால்
(5) கிளித்தட்டு, கிட்டிப்புள், சடுகுடு, பல்லாங்குழி, போர்த்தேங்காய்.


02. (1) கமுகு (2) தென்னை (3) சிலந்தி (4) சிங்கம் (5) கத்தி

03. (1) 5, 6 (2) 15, 18 (3) 17, 21 (4) 25, 30 (5) 45, 35

04. எழுவாய், பயனிலையுடன் பொருத்தமான வாக்கியங்கள் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் பெற்ற



பண்டைய காலத்திலிருந்தே ஓவியம் வரைவதில் மனிதன் தனது ஈடுபாட்டைக் காட்டியுள்ளான். கற்குகைகளிலேயே அவன் முதன்முதலில் ஓவியங்களை வரைந்தான். தனது அனுபவங்களைத் தெரியப்படுத்தும் நோக்கத்திற்காகவே இவ்வாறு அவன் செய்துள்ளான். இதன்படி, ஆரம்பமான ஓவியக் கலை இன்றளவில் உலகம் முழுவதும் வியாபித்துள்ளது. அந்தவகையில், உலகின் புகழ் பெற்ற ஓவியர்கள் பற்றியும் அவர்களது ஓவியங்கள் பற்றியும் அறிந்துகொள்வோம்

## மைக்கலெஞ்சலோ (கி.பி 1475-1564)

மைக்கலெஞ்சலோ, புனர்வாழ்வு யுகத்தில் வாழ்ந்த மிகத்திறமை வாய்ந்த கலைஞராவார். இத்தாலியின் ஹெபிரிஸ் எனும் சிறிய கிராமத்தில் பிறந்த இவர், சிறு வயதிலேயே பெற்றோரின் பாசத்தினை இழந்து, செவிலித்தாயிடமே வளர்ந்தார். கற்சிற்பியொருவரின் தயவினால் தனது ஏழாவது வயதில் ஒரு மனிதத் தலையை செதுக்கும் அளவுக்குத் திறன் பெற்றார். இவ்வாறு வளர்ந்த அவரது சிற்பக்கலை ஞானம் லொரென்சோ டிமெக்னிஃபிஷன்ட்டின் பாடசாலையில் சேர்ந்ததை அடுத்து மேலும் மெருகேறியது. லொரென்சோ வெடிசி கலைக்குடும்பத்தை சேர்ந்தவர். அவர் மைக்கலெஞ்சலோவை தனது மகனைப் போன்று கவனித்து வந்தார்.



உலகப் பிரசித்தி பெற்ற ஓவியரும் சிற்பக்கலைஞருமான மைக்கலெஞ்சலோவுக்கு அதிகமான எதிரிகள் இருந்தனர். அவர்களுக்கிடையேயான தகராறொன்றின் காரணமாக ஏற்பட்ட தழும்பு அவர் முகத்தில் காணப்பட்டது.

இந்த கலைஞரினால் படைக்கப்பட்ட சிற்பங்கள் பல உள. இவற்றில் ரோமில் உள்ள சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் பளிங்குக்கற்களினால் செதுக்கப்பட்டுள்ள 'பியாட்டா' என்ற சிலை மிகவும் பிரபல்யமானது. இதில் அவரது கையொப்பமும் உள்ளது. அதன் பின்னர் அவர் படைத்த ராட்சதனின் சிலை, சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் சிலுவை என்பனவும் குறிப்பிடத்தக்கன. இதற்கிடையில், ரோமின் 'சிஸ்டயின்' தேவாலயத்தில் ஓவியங்கள் வரைவதற்கு அவருக்கு வாய்ப்புக் கிட்டியது. நான்கு வருடங்களாக அந்தப் பணியில் ஈடுபட்டார். இந்த தேவாலயத்தில் அவரது ஓவியங்கள் பல உள்ளன. மைக்கலெஞ்சலோவின் ஓவியங்களில் 'பாரிய வெள்ளப்பெருக்கு' மற்றும் 'இறுதித் தீர்ப்பு' என்பன பிரசித்தி பெற்றவை.



## ஜியோட்டோ டி பொன்டோனே (கி.பி 1267-1337)



இவர் இத்தாலி நாட்டு ஓவியராவர். இவரது தந்தை மந்தை மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டவராவார். தனது தந்தையின் மந்தைகளை ஓவியமாகத் தீட்டியதனூடாக ஓவியக்கலைக்குள் பிரவேசித்தார்.

இவரின் மனித ஓவியங்கள் இயற்கைத் தன்மை வாய்ந்தவை. தனது ஓவியங்களில் முப்பரிமாண இயல்பினைக் காட்ட முயன்றுள்ளார். தனது பெருமளவு ஓவியங்கள் தேவாலயங்களிலேயே உள்ளன. அசிசி தேவாலயத்தில் 28 ஓவியங்களும் எனோ தேவாலயத்தில் உள்ள மாதாவின் திருவுருவம், யேசுவின் திருவுருவம் உள்ளடங்களாக 38 ஓவியங்கள் இவரால். வரையப்பட்டுள்ளன. ஃப்ளோரன்சில் சென்.குரோஸ் தேவாலயத்தில் உள்ள சென் பிரான்சிஸின் இறுதிச் சடங்கினை சித்தரிக்கும் இவரது ஓவியம் தனித்துவம் வாய்ந்ததாகும். இந்த ஓவியம் குறுக்கான கோடுகளையும் நேர்கோடுகளையும் கொண்டு வரையப்பட்டுள்ளது.



## சென்ட்ரோ போட்டிசெல்லி (கி.பி 1445-1510)



ஃப்ளோரன்ஸ் நகரில் வாழ்ந்த போட்டிசெல்லி, தங்க வியாபாரியொருவரின் மகனாவார். இவரது விருப்பத்துக்குரிய ஓவியங்களுக்கான தொனிப்பொருள்களாக மத சார்புடைய சம்பவங்களும் புனைகதைகளுமே அமைந்தன. இன்றும் இவ்வாறான ஓவியங்களை சிஸ்டைன் தேவாலயத்தில் காண முடியும். வீனசின் பிறப்பு, ஏகாந்த நிலை என்பன இவரால் வரையப்பட்ட ஓவியங்களில் சிலவாகும். வீனஸ் ஓவியமானது, கடல் சிப்பியொன்றிலிருந்து பூ மழையொன்று கரையை நோக்கி வருவது போன்று வரையப்பட்டுள்ளது. போட்டிசெல்லி ரேகை ஓவியம் வரைவதில் கைதேர்ந்தவர். 'டிவய்ன் கொமடி' அதற்கு சிறந்த உதாரணமாகும்.





## மொசாக்சோ (கி.பி 1

முன் எழுச்சி யுகத்தில் வாழ்ந்த பிரபல ஓவியர். ஃப்ளோரன்ஸ் நகரில் பிறந்த இவர், 27 ஆவது வயது வரையே உயிர் வாழ்ந்துள்ளார். இவரின் ஓவியங்கள் முப்பரிமாண வடிவம் கொண்டவை. அவற்றினூடாக இருட்டு, வெளிச்சம், கனத்தன்மை என்பனவற்றை வெளிக்காட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஓவியர்கள்

## லியனாடோ டாவின்சி (1452-1519)

இத்தாலியின் ஃப்ளோரன்ஸ் நகருக்கு அண்மையில் உள்ள சின்ச்சி கிராமத்தில் 1452 இல் இவர் பிறந்தார். இவரது தந்தை ஒரு சட்டத்தரணியாவார். சிறு வயதில் டாவின்சிக்கு ஒரு விசித்திரப் பழக்கம் இருந்தது. அதாவது, தன்னைச் சூழவுள்ள விடயங்களை சித்திரமாக வரைபவராகத் திகழ்ந்தார். அதுவே இவரது பொழுதுபோக்காகவும் இருந்தது. இதனை அவதானித்து வந்த அவரது தந்தை, டாவின்சியை ஃப்ளோரன்ஸ் நகரில் வசித்து வந்த என்ட்ரியா டெலா வெரோஷியோ எனும் கலைஞரிடம் அழைத்துச் சென்றார். வெரோஷியோ சிறந்த ஓவியரும் சிற்பக்கலைஞருமாவார். டாவின்சிக்கு 25 வயதாகும் வரை அவர் வெரோஷியோவிடம் ஓவியக் கலையினைப் பயின்றார். பின்னர் டாவின்சிக்கு பெட் செலீ பெரபினோ, என்டோனியோ, பொலிவெலோ போன்ற பெரும் கலைஞர்களின் நட்புக் கிடைத்தது. அதன் பின்னர் அவர் ஃப்ளோரன்சிலுள்ள ஓவியக் கலைஞர்களின் சங்கத்தில் இணைந்து கொண்டார். ஓவியக் கலையைப் போன்று இசைக் கலை மீதும் டாவின்சி ஆர்வம் கொண்டிருந்தார். அதன்படி, அவர் ஒரு பாடகராகவும் சிறந்த வாத்தியக் கலைஞராகவும் விளங்கினார்.

அவரால் வரையப்பட்ட ஓவியமொன்று 'மதுசா' என்று அழைக்கப்படுகின்றது. இது அவர் தனது சிறு வயதில் வரைந்த பெரிய ஓவியமாகும். அதன் பின்னர் தனது ஆசிரியர் வெரோஷியோ வரைந்த ஓவியமொன்றின் ஒரு மூலையில் தேவதையின் உருவமொன்றை டாவின்சி வரைந்தார். 'யேசுவின் ஞானஸ்தானம்' என்ற அந்த ஓவியத்தில் டாவின்சியால் வரையப்பட்ட உருவம் ஆசிரியரை வியக்க வைத்தது. 'பூஜை வழிபாடு' என்ற ஓவியமும் டாவின்சியால் சிறுவயதில் வரையப்பட்டதாகும்.

'மாதாவும் மலர்களும்', பெண்ணொருவரின் மேற்பகுதியைச் சித்திரிக்கும் ஓவியம், 'கன்னி மாதாவுக்கு தேவதூதரின் காட்சி' என்பனவும் டாவின்சியின் உலகப் புகழ் பெற்ற சில ஓவியங்களாகும். இவற்றில் 'இறுதி ராப்போசணம்' எனும் ஓவியம் மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இந்த ஓவியத்தினை வரைய மூன்றாண்டுகள் தேவைப்பட்டன.







அவ்வாறே, உலகப் பிரசித்தி பெற்ற 'மொனாலிசா' எனும் ஓவியமும் டாவின்சியின் மற்றுமொரு விசேட படைப்பாகும். இவைதவிர, டெலாஸ்குவின் கரடி, யுத்தக்காட்சி,மனிதனின் உடலுக்கு ஒப்பான சூத்திரம், சாந்த ஜெரம் இசபெல்லா தெஸ்தி, கோமாளி உடை தரித்த இளைஞன் என்பனவும் இவரது பிரசித்தி பெற்ற படைப்புகளாகும். கலைக்கு அளப்பரிய சேவையாற்றி இவர் கி.பி 1519 இல் இயற்கை எய்தினார்.

## ரஃபாயல் சான்சியோ (1483-1520)





இவர் இத்தாலி நாட்டு ஓவியராவார். இவரது தந்தையும் ஓர் ஓவியராவார். அதன்படி, தனது தந்தையின் வழிகாட்டுதலில் ஓவியக்கலையில் பிரவேசித்தார்.37வருடங்கள் மட்டுமே உயிர் வாழ்ந்த இவர், வாழ்நாள்வரை சிறந்த படைப்புகளை படைத்துள்ளார். குறுகிய காலமே உயிர் வாழ்ந்தாராயினும் அவர் வரைந்த ஓவியங்களின் எண்ணிக்கை அளப்பரியனவாகும். இவரது கலைப் படைப்புகள் முழுமை பெற்றவையாக இருந்ததாக விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

ரஃபாயலின் சிறுவயதிலேயே அவரது தந்தை இறந்துவிட்டார். அதன் பின்னர் அவர் பல்கலைக்கழகத்தில் இணைந்து ஓவியக் கலை பற்றி கற்றுக்கொண்டார். அவருக்கே உரிய பாணியில் ஓவியங்களை வரைந்தார். அதேபோன்று, அம்பிரியன் கலை முறையையும் பின்பற்றியுள்ளார். அவரது படைப்புகளில் க்ரண்டுகா நைங்ரிம ஸ்பாசலியோ, என்டும்பிமன்ட், மேரி மாதாவும் குழந்தை யேசுவும், மெடோனா டேல் ஃப்ரென்ட்டியுகா,எதனஸ் குருவம்சம், ஜூலியஸ் மன்னனின் மேற்புறத் தோற்றம், ட்ரான்ஸ்ஃபிகரேஷன், சிஸ்டினா மெடோனா என்பன பிரபல்யம் வாய்ந்தவை. மேரி மாதாவும் குழந்தை யேசுவும் என்ற ஓவியம் அவரது ஆரம்பகால ஓவியமாகும். அவர் வரைந்த 'சிரேஷ்ட உருவக் காட்சி' எனும் ஓவியம் முழுமை பெறாத நிலையிலேயே காணப்படுகின்றது. இது 'ரஃபாயலின் பைபிள்' என்று குறிப்பிடப்படுகின்றது. இன்றும் இதனை வத்திக்கானில் காணலாம். கி.பி 1483 மார்ச் 28 ஆம் திகதி உர்பினோ நகரில் பிறந்த ரஃபாயல், எழுச்சி யுகத்தில் வாழ்ந்த ஓவியர்களில் மூன்றாமவராவார். இவர் 1520 ஆம் ஆண்டில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தார்.

## டிஷியன்

இவரது இயற்பெயர் டிசியானோ விசெல்லி என்பதாகும். எனினும், 'டிஷியன்' என்ற பெயரினாலேயே பிரபல்யமானார். இவரது படைப்புகள் யாவும் கலாசாரத்துவத்தை வெளிப்படுத்தி அமைந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. இவர் தனது வாலிபப் பருவத்தில் வரைந்த அதிகளவு ஓவியங்கள் நிர்வாண ஓவியங்களாகும். மதம்சார்ந்த படைப்புகளை நிர்மாணிப்பதில் அதிக நேரத்தினை செலவிட்ட இவர், இரண்டாம் ஃபிலிப் மன்னனின் அரண்மனைக்குத் தேவையான ஓவியங்களை வரைவதிலும் அதிக காலத்தினை செலவிட்டார். ஃபிலிப் மன்னனுக்காக வரைந்த 'ட்ரினிடி' ஓவியத்தை இன்று ப்ரோடா அருங்காட்சியகத்தில் காணலாம். இது மிகப் பெரிய ஓவியமாகும்.





பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வகையான பாணிகளில் ஓவியங்களை வரையும் வழக்கத்தினை இவர் கொண்டிருந்தார். இவரால் வரையப்பட்ட இரண்டாம் ஃபிலிப் மன்னனில் உருவம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது போலியான, ஆணவம் கொண்ட, அழகற்ற, சோகமயமான ஓவியம் என்று விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.டிஷியன் யேசுநாதரின் பல்வேறு ஓவியங்களையும் வரைந்துள்ளார். இவர் வரைந்துள்ள ஓவியங்களில் ஆதாம்-ஏவாள், என்டிடனின் மரணம், வீனஸ் மற்றும் இரண்டு மன்மதர்கள், எடோனிஸ், டயனா மற்றும் கெலிஸ்டோ,மெடோனா பிள்ளையை பராமரித்தல், சென் ஜெரம் என்பன முக்கியமானவை. இவரது பெரும்பாலான ஓவியங்கள் எண்ணெய் வர்ணங்களினால் வரையப்பட்டவையாகும். இவர் தனது 70 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

## எட்வர் மனே (கி.பி 1832-1883)





1832 ஆம் ஆண்டு பிரான்ஸின் பெரிஸ் நகரில் பிறந்தார். தனது 19 ஆவது வயதில் குகுரே என்ற ஓவியக் கலைஞரிடம் ஓவியக் கலையைப் பயின்றார். பின்னர் ஜேர்மனி, ஒஸ்ட்ரியா, இத்தாலி ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்து பண்டைய படைப்புகள் குறித்து தனது அனுபவத்தினைப் பெற்றுக்கொண்டார். இதனூடாக அவருக் கென்று தனித்துவமான பாணியொன்றை உருவாக்கிக்கொண்டார். நிறங்களை உறையச்செய்து கென்வசில் பயன்படுத்துவது அவரது வழக்கமாக இருந்தது.

நவீன வாழ்வைப் பிரதிபலிக்கும் விதமாக அமைத்த இவரது ஓவியங்கள், உண்மை நிலையை பிரதிபலிக்கக்கூடியனவாகவும் கவனத்தை ஈர்க்கக்கூடியதாகவும் விளங்கின. அத்துடன், மனேயின் பல ஓவியங்கள் நிராகரிக்கப்பட்டும் உள்ளன. இவரது 'நதிக்கரை நோக்கிய பயணம்' எனும் ஓவியம் சர்ச்சைக்குரிய ஓவியமாகக் கருதப்படுகின்றது. எனினும், தற்காலத்தில் அவரது படைப்புகள் உயர்வாகக் கருதப்படுகின்றன.

## க்ளோட் ஒஸ்கார் மனே (1840-1926)

1840 ஆம் ஆண்டு பிரான்ஸில் பிறந்தார். இவர் பொழுது புலர்வதிலிருந்து அந்திசாயும் வரை ஓவியம் வரைபவராகத் திகழ்ந்துள்ளார். இதனால், ஒரே ஓவியம் பல தடவைகளுக்கு வரையப்பட்டுள்ளது. இயற்கைக் காட்சிகளும் இயற்கை அம்சங்களுமே இவரது





ஓவியங்களாக இடம்பெற்றுள்ளன. 'சன் ரைஸ் இம்ப்ரேஷன்' அவரால் வரையப்பட்ட முதலாவது ஓவியமாகும். ரோம் தேவாலயத்திற்காக 26 தடவைகளும் வோட்டர்லூ பாடசாலைக்கென 16 தடவைகளும் ஓவியங்களை வரைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

## ... (கி.பி 1401-1428)

முயற்சித்துள்ளார். காமினா தேவாலயத்தில் இவரால் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் 'ட்ரிபியூட்டரி' எனும் 'செல்வங்கள் பகிர்ந்தளிப்பு' ஓவியம் குறிப்பிடத்தக்கதாகும். அது யேசுநாதரை சூழ்ந்திருக்கின்ற அவரது சீடர்களை சித்தரித்துள்ளது. அதில் அனைத்து உருவங்களும் ஒரே உயரத்தைக்கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தறிவும் ஆறறிவும்




பாரதநாட்டை ஆண்ட புத்திமான் என்னும் அரசர் பெயருக்கேற்றாற்போல் புத்திசாலியாகவும் அதேவேளை, நற்பண்புகளும் அன்புள்ளம் கொண்டவருமாக விளங்கினார். அரண்மனையில் நீதி வழங்கும் நேரம் தவிர மாலை வேளையில் வேட்டைக்குச் செல்வது அவரது வழக்கம். அரசர் இவ்வாறு செல்லும்போது அவருடைய இராஜதந்திரியும் கூடவே செல்வார்.

ஒருநாள் அரசன் வேட்டைக்குச் சென்றபோது ஒரு சிறுவன் நன்கு பழுத்த கனிகள் காய்த்திருந்த மா மரத்திற்கு கல்லொன்றை எறிந்தான். அந்தக்கல் மரத்தில் படவே, இரு கனிகள் கீழே விழுந்தன. அத்துடன், அந்தக்கல் அங்கிருந்த அரசனின் தலையில் படவே அரசனின் தலையில் இருந்து இரத்தம் பீறிட்டது.

உடனே இராஜதந்திரி கல்லை எறிந்த சிறுவனைப் பிடித்துவர காவலாளிகளை ஏவினார். காவலாளிகளும் அச்சிறுவனைப் பிடித்து வந்து அரசனின் முன் நிறுத்தினார்கள். கைகளில் இரண்டு மாங்கனிகளுடன் நின்ற அந்த சிறுவனை அரசன் புத்திமான் கூர்ந்து நோக்கினார். பின்னர் அச்சிறுவனுக்கு நூறு பொற்காசுகள் வழங்குமாறு உத்தரவிட்டார்.

உடனே அருகில் இருந்த இராஜதந்திரி, "உங்கள் மீது கல்லை எறிந்தவனுக்கு ஏன் நூறு பொற்காசுகள் கொடுக்கவேண்டும்?" என்று வியப்புடன் கேட்டார். அதற்கு புத்திமான், "ஐந்தறிவு கொண்ட மரமே அச்சிறுவன் கல்லை எறிந்ததும் இரண்டு கனிகளைக் கொடுத்தது. நாம் ஆறறிவு படைத்த மனிதர்கள், நாம் தண்டனை கொடுப்பது சரியா? ஆகவேதான் அச்சிறுவனுக்கு நூறு பொற்காசுகள் கொடுக்க உத்தரவிட்டேன்" என்றார் அமைதியாக. அரசனின் கருணை உள்ளத்தை அறிந்த ராஜதந்திரி மனம் நெகிழ்ந்தார்.

சு.ஜீவன் பிரதாப்,
பேராதனை இந்துக் கல்.,

# சிறுவர்களின் எதிர்காலத்திற்கு....



'இளம் சிறுவர்களே! எதிர்காலத் தூண்கள்' என்பது சான்றோர் வாக்கு. இன்று சிறுவர்கள் துஷ்பிரயோகங்களால் தம் உரிமைகளை இழக்கின்றனர். சிறுவர்களைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், சிறுவர்களைப் பாதுகாப்பதில் பொறுப்புள்ளவர்கள் அல்லது உரித்துள்ளவர்கள் இந்த விடயங்களில் கவனமின்றி செயற்பட்டால் எவ்வாறு சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்?

சிறுவர்களின் எண்ணங்களுக்கும் அவர்களின் கற்பனைகளுக்கும் அவர்களின் உரிமைகளுக்கும் மதிப்பளித்து அவர்களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவிப்பது என்பது ஒரு மகத்தான செயல். அதன்மூலம் ஒரு நல்ல பிரஜையை உருவாக்க முடியும்.

சிறுவர்களுக்குள் எத்தனையோ ஆழ்ந்த கருத்துக்களும் எத்தனையோ புதுமைகளும் புதைந்துள்ளதை அறியலாம். அவற்றை நாம் வெளிக்கொண்டு வரவேண்டும். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பார்கள். அதன்படி, சிறுவர்களுக்கு கல்வி அறிவு மிகவும் முக்கியமானதாகும். ஆனால், அதற்கு மாறாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது என்பது ஒரு சட்டவிரோதமான மற்றும் துஷ்பிரயோகச் செயலாகும். இச்சிறுவர்கள் தமது எதிர்காலத்தில் சட்டத்தரணியாகவோ, சட்டத்தைக் காக்கும் காவல் அதிகாரியாகவோ உருவாகக்கூடும். ஆதலால், சிறுவர்களை கிளிக் கூண்டில் அடைத்து வைப்பது போல் வீட்டினுள் அடைத்து வைக்காமல் சுதந்திரமாக வெளியில் சென்று கல்வி பெற நடவடிக்கை எடுங்கள். அவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு இன்றே முறையான அத்திவாரமிடுங்கள்.

கே.கலையரசி,
கதிரேசன் இந்து ம.கல்.,
நாவலப்பிட்டி

# நன்றி மறப்பது நன்றன்று

பாவங்களில் மிகப்பெரிய பாவம்தான் நன்றி மறப்பது. 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக்கூடாது', 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பன முதுமொழிகள். ஆகையால் உதவி செய்தவர்களை ஒருபோதும் மறந்திடலாகாது.

தேவை ஏற்படும்போது மாத்திரம் மதிப்பும் கௌரவமும் கொடுத்துவிட்டு அத்தேவை முடிந்ததும் அவர்களை மறந்து தீங்கு விளைவிப்பது மிகப் பெரும் பாவமாகும். திருவள்ளுவரும் இதனை

**'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகட்கு'** என்றார்.



நமது சொல்லொணா துன்ப துயரத்தைக் கண்டு ஒருவர் உதவி செய்கிறார். மற்றொருவர் உதவியை சிறிது காலம் தாமதித்துச் செய்கிறார். பிறிதொருவர் உதவி செய்ய எத்தனிக்கிறார். இம்மூன்று பேரிலும் முதலாமவரின் உதவியை மாத்திரம் கருத்திற் கொண்டு மற்றையவர்களின் நன்றியை மறந்து பேசுவது மனிதப் பண்பல்ல.

எப்பொழுது ஒருவன் நன்றி மறவாமல் செயற்பட்டு அதன்படி வாழப்பழகுகின்றானோ அப்பொழுதுதான் அவன் பூரண சுதந்திரத்தையும் முழுமையான வாழ்வையும் பெறுகிறான்.

எம்.முபஸ்ஸிர், தி/புல்மோட்டை மு.ம.வித்.,

# முத்தான மூன்று

★ மிகக் கடினமானவை மூன்று

1. ரகசியத்தைக் காப்பது
2. இழைக்கப்பட்ட தீங்கை மறைப்பது.
3. ஓய்வு நேரத்தை உயர்ந்த வழியில் பயன்படுத்துவது.

★ நன்றி காட்டும் முறைகள் மூன்று

1. இதயத்தால் உணர்தல்
2. சொற்களால் தெரிவித்தல்
3. பதிலுக்கு உதவி செய்தல்

★ மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு மூன்று

1. சென்றதை மறப்பது.
2. நிகழ்காலத்தை நேர்வழியில் செலுத்துதல்.
3. எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பது.

★ இழப்பு மூன்று வகை

1. சமையல் அமையாவிட்டால் ஒருநாள் இழப்பு.
2. அறுவடை சிறக்காவிடின் ஓராண்டு இழப்பு.
3. திருமணம் பொருந்தாவிட்டால் வாழ்நாள் முழுவதும் இழப்பு.

★ உயர்ந்த மனிதனின் வாழ்வு வகை மூன்று

1. அவன் ஒழுக்கத்தோடு இருப்பதால் கவலையற்றிருப்பான்.
2. அவன் அறிவாளியாக இருப்பதனால் குழப்பங்களற்றிருப்பான்.
3. அவன் துணிவாக இருப்பதனால் அச்சமின்றி இருப்பான்.

பாத்திமா றிஸ்வானா ரவுப்,
தரம் - 11, கொடேகொட மு.வித்., ஹெம்மாதகம.

# நாட்டார் பாடல்கள்



நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டார் பாடல்கள் எனப்படும். நாட்டார் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளன. மனிதனின் பிறப்பு முதல், இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் நாட்டார் பாடல்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. அவை முன்னைய காலமக்களின் வாழ்க்கை முறைகளை தெளிவுறப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

நாட்டார் பாடல்களை நாட்டுப்புறப் பாடல்கள், வாய்மொழிப்பாடல்கள், நாடோடிப் பாடல்கள், கல்லாதார் பாடல்கள், பாமரப்பாடல்கள், கிராமியப் பாடல்கள், பரம்பரைப் பாடல்கள் என பலவாறு அழைக்கிறார்கள்.

மனித உள்ளத்தின் ஆழத்தையும் அங்கே தோன்றி எதிரொலிக்கும் பல்வேறு ஒலிகளையும் இன்ப, துன்பங்களையும் ஆசாபாசங்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் நாட்டார் பாடல்களில் காணலாம். நாட்டார் பாடல்கள் மனித உணர்வுகளின் வெளிப்பாடாக பண்டைக்காலந்தொட்டு மக்களின் வாழ்வில் பல்வேறு துறைகளிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. எனவே, ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை,பண்பாட்டை, வரலாற்றை, நாட்டு நடப்பை படம் பிடித்துக் காட்டுவன நாட்டார் பாடல்களாகும்.

ஜெ.சுமையா, கே/மா/பதுரியா ம.கல்., மாவனல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3007
எஃப்.ஷம்ஹா, தரம் - 1, ஸாஹிரா கல்., திருகோணமலை.


அங்.இல: 3008
எம்.உஸ்மான், தரம் - 4, தெ/மு.ம.வித்., கலேவல.


அங்.இல: 3009
சி.ஜனார்த்தனன், தரம் - $5^{B}$, இணுவில் ம.கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3010
எம்.சஃப்ராஸ், தரம் - 7, பதுரியா ம.கல்., மாவனல்லை.


அங்.இல: 3011
எம்.அக்மல், தரம் - $11^{D}$, பறகஹதெனிய தே.பாட., குருநாகல்.


அங்.இல: 3012
த.சுஜீவன்,தரம் - 5, காந்தன் இராமுப்பிள்ளை வித்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3013
நு.நபாரிஸ், தரம் - 10, பொத்துவில் ம.கல்., பொத்துவில்.


அங்.இல: 3014
றொகான் பீரிஸ், தரம் - 10, அரிப்பு றோ.க.த.பாட., சிலாபத்துறை.


அங்.இல: 3015
எம்.சல்மான், தரம் - 9, தாருல் ம.வித்., அக்குறனை.


அங்.இல: 3016
றினோஸ் சகீ, தரம் - 1, சி.அ.கல்., வாழைச்சேனை.


அங்.இல: 3017
ச.கஜாளினி, தரம் - $8^{C}$, வ/இ.ம.ம.வித்., வவுனியா.


அங்.இல: 3018
ம.சுதமஸ், தரம் - $8^{B}$, முளங்காவில் ம.வித்., கிளிநொச்சி.


அங்.இல: 3019
இ.மு.முஸ்னி, தரம் - 2, இஹ்சானியாஹ் அ.கல்., கல்முனை.


அங்.இல: 3020
ப.பிரசாந், தரம் - $11^{B}$, கண்டாவளை ம.வித்., கிளிநொச்சி.


அங்.இல: 3021
ஜே.சப்றீன், தரம் - 7, றவ்ழதுல் ஜன்னாஹ் அ.கல்., மூதூர்.


அங்.இல: 3022
மு.அறபாத், தரம் - $11^{D}$, அலிகார் தே.பாட., ஏறாவூர்.


அங்.இல: 3023
இ.ஏரகன், உயர் தரம்(கணிதம்), கொக்குவில் இ.கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3024
உ.ராகுல்நாத், தரம் - 5, மெராயா த.வித்., நுவரெலியா.


அங்.இல: 3025
ப.பிரசாந்தன், தரம் - 11, அளம்பில் றோ.க. த.பா., முல்லைத்தீவு.


அங்.இல: 3026
வி.வதன், தரம் - 10, இல-550, ராமநாதன் முகாம் வலயம் 7,செட்டிக்குளம்.

# கொட்டாவி விடுவதும் நன்மைக்கே!



கொட்டாவி விடுவது அநாகரிகமான செயல் என்றே நம்மில் பலர் கருதுகின்றனர். இதனால், ஏனையோர் முன்னிலையில் கொட்டாவி வந்துவிட்டால் அதை அடக்கப் பலரும் பெரும்பாடு படுகின்றனர். ஆனால், சமீபத்திய ஆராய்ச்சியொன்றிலிருந்து கொட்டாவி விடுவது நன்மையான விடயம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

அதாவது, உடல் இயக்கங்களுக்கு மூளையே மூல காரணமாக இருக்கின்றது. மூளையின் இயக்கத்திற்கு அதிக குருதி தேவைப்படுகிறது. இதற்கு கொட்டாவி பெரிதும் துணைபுரிகின்றது. கொட்டாவி விடுவதன் மூலம் குருதியானது இருதயத்தை நோக்கி விரைந்து செல்லும் என்பதோடு, மூளைக்குச் செல்லும் குருதியின் அளவும் அதிகமாகிறது. அதனை அடுத்து மூளையின் தடுமாற்ற நிலை சமநிலை அடைந்து, ஒட்சிசன் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. எனவே, 'கொட்டாவி' வருவதும் நன்மைக்கே.

# வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 16.09.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்**
**குறுக்கெழுத்துப் போட்டி இல: 09**
**'விஜய்',**
**த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நீ | தி | 2 ம | ன் | ற | 3 ம் |
| தி | ■ | ன் | ■ | ■ | ழ |
| ■ | 4 ப | னி | ■ | 5 டை | ப |
| ■ | ■ | ப் | ■ | ■ | ■ |
| 6 உ | ப் | பு | ■ | ■ | 7 வே |
| ளி | ■ | ■ | 8 க | ன | வு |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 07 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு**
வ.மதிஷாந், 650/2, திருகோணமலை வீதி, மாத்தளை.

**இரண்டாம் பரிசு**
பி.டெபோறா, 194,சூசைப்பிள்ளையார் குளம், வவுனியா.

**மூன்றாம் பரிசு**
ஹம்தா பானு லியாவுத்தீன், 33/A முஸ்லிம் பள்ளி ஒழுங்கை, நாவல ரோட்,ராஜகிரிய.

## ஆறுதல் பரிசுகள்

ச.விவேக், 1/3E/64 கதிரானவத்தை, மட்டக்குளிய.

எம்.என்.எப்.மஷ்ரிபா நஸீம், 65A, யோனகபுர, திக்குவெல்ல.

எம்.வேனுஷினி, 49, ஹீரஸ்ஸகல வீதி, கண்டி.

F.N.M.நுஸ்ரான், 48, பெரெக் வீதி, ஹம்பாந்தோட்டை.

செ.பிரியதர்ஷினி, புனித மரியாள் வீதி, தலைமன்னார்.

J.சப்னா, கூபா நகர், கிண்ணியா-03.

வ.கிர்சனா, தளப்பத்து வீதி, பெரியகல்லாறு-03, கல்லாறு.

அஃபீபா ஷபீக், 225, நம்புலுவ, பஸ்யால.

கிறிஸ்மிலா ஜோர்ஜ், 15/4A, ரெயில்வே அவென்யூ, நுகேகொட.

எம்.அய்யாஸ், அலுப்பொத்த, படல்கும்புர.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கா | | | | ■ | 2 ஒ |
| | ■ | ■ | ■ | 3 | |
| ■ | 4 | 5 | | ■ | |
| 6 ப | ■ | | ■ | ■ | ந் |
| | ■ | ■ | ■ | ■ | |
| 7 | | ■ | ■ | 8 | |

பெயர் : ..................................
வீட்டு முகவரி : ..................................
..................................
தொலைபேசி இல : ..................................
பாடசாலை : ..................................
அருகிலுள்ள நகரம் : ..................................
மாவட்டம் : ..................................

### மேலிருந்து கீழ்

1. மிருகங்களும் இங்கு வாழும்.
2. இலங்கையை ஆட்சி செய்த அந்நியர்.
5. இது நீரில் வாழும். (தலைகீழ்)
6. ஆற்றைக் கடக்கவும் உதவும்.

### இடமிருந்து வலம்

1. தொற்றுநோய் ஒன்று
3. பசுவிடமும் கிடைக்கும்.
4. இது மறப்பது நல்லதல்ல.
7. கற்கால மனிதனின் இல்லம்.
8. யுத்தம் என்றும் சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

மொறட்டுவை, எகொட உயன அல்-ஹஸனாத் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக இடம்பெற்ற விநோத உடைப்போட்டியில் பங்குபற்றிய சிறுவர்களையே படத்தில் காண்கின்றீர்கள்.

(தகவல்: ஏ.எம்.அபாஸ் 'விஜய்' இளம் செய்தியாளர்)



குருணாகல்-நாரம்மலையைச் சேர்ந்த உருத்திரராசா-கஜந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹவிசன், 30.08.2009 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, தம்பி ஆகியோர் மண்கும்பான் பிள்ளையார் அருள்பெற்று, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.



எலுவிலையைச் சேர்ந்த அஸ்மத்-மர்ஜானா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் சாபித், 27.08.2009 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளை விமர்சையாகக் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா உட்பட குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் :எம்.என்.எஃப்.ஷாகிரா)





## கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு



ருஸ்னா புஹாரி, தரம் - 6A, அல்-ஹுஸனியா மு.ம.வித்., மக்கொனை.



பீ.டி.எம்.மபாஸ், தரம் - 10C, ஆலங்குடா மு.ம.வித்., ஆலங்குடா.



எம்.ரிப்கி, தரம் - 4A, நஸ்ரியா ம.கல்., சிலாபம்.



எம்.ஐ.எஃப்.சுகூறா, தரம் - 2B, அல்-ஹிறா ம.வித்., காத்தான்குடி.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

முடிவுத்திகதி 18.09.2009

**நொவெம்பர் மாதத்துக்கான தலைப்புகள்**

- ★ தரம் 1-5 - பட்டம் அல்லது மாம்பழம்
- ★ தரம் 6-8 - கூசா அல்லது ஆசிரியர்
- ★ தரம் 9-11 - சிரமதானம் அல்லது நெடுஞ்சாலையில் வாகனங்கள்

**அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!**

நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

### கத்தரிக்காய்



கி.எப்சிபா, தரம் - 1, மன்/பொன்தீவுகண்டல் ரோ.க.த.ம.வித்., முருங்கன்.



எம்.ஐ.சல்மான்கான், தரம் - 4A, தெழும்புகஹவத்தை மு.வித்., அகுறனை.

### யானைக்குட்டி



கே.எஃப்.பர்வின், தரம் - 3, அல்-பதாஹ் மு.ம.வித்., நிலாவெளி.



மு.அ.றிஸ்கா, தரம் - 5, அல்-ஹிரா மு.ம.ம.வித்., கிண்ணியா.

### வாழைமரம்



ஏ.அர்ஷட் அஹ்மட், தரம் - 8, கேகாலை மு.ம.வித்., கேகாலை.



எம்.ஆர்.எப்.ஆயிஷா, தரம் - 7G, மின்ஹாத் தே.பாடசாலை, திக்குவல்லை.

### கைக்குடை




பாத்திமா பர்ஹா, தரம் - 6, நாபாவல மு.ம.வித்., கேகாலை.



எம்.டீ.எஃப்.மஹீஷா, தரம் - 8B, அல்மின் தே.பாட.,

### பட்டம் விடுவோம்



எம்.ஆர்.எப்.ரிஸ்லா, தரம் - 9, துந்துவ மு.ம.வித்., துந்துவ.



எம்.எஃப்.பஸ்மிலா, தரம் - 11, மடிகே மு.ம.வித்., முதுன்துவ.



ஏ.எல்.கைறுன் நிஸா, தரம் - 9C, அல்-பஹ்றியா ம.வித்., கல்முனை.

### சந்தை



எஸ்.எஸ்.சப்னா சிரீன், தரம் - 9A, ஹிஸ்புல்லாஹ் ம.கல்., குருணாகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் கணினி மயம்!

## செய்திகளை அறிந்து பந்தயம் பிடிக்கலாம்




'ஹப்டப் (hubdub) எனப்படும் இணையத் தளத்தின் ஊடாக தொடர்ச்சியாக சர்வதேச செய்திகள் வழங்கப்படுவதுண்டு. இதன் சிறப்பு என்னவென்றால் இந்த இணையத்தளத்தில் புதிய எக்கவுண்ட் (கணக்கு) ஒன்றை திறப்பவருக்கு ரூபா.1000/= வழங்கப்படும் என்று உண்டியல் அடையாளத்துடன் ஓர் அறிவித்தல் காணப்படும். மேற்படி இணையத்தளத்தில் வழங்கப்படுகின்ற செய்திகளை வாசிக்கின்றவர்கள் அந்த செய்தி தொடர்பான நிகழ்வை யிட்டு அடுத்து என்ன நடக்கக்கூடும் என்ற தமது எதிர்வுகூறல்களை, கணிப்புக்களை மேற்படி உண்டியல் வழியே தெரிவித்து பந்தயம் பிடிக்கமுடியும். ஆனால், இதற்காக எந்தவிதத்திலும் பணம் வழங்கப்படமாட்டாது. எனினும், செய்திகளை அறிவதில் ஆர்வம் கொண்டுள்ளவர்களுக்கு இது நல்லதோர் பொழுதுபோக்காக அமையும். இதற்கான இணையத்தள முகவரி - www.hubdub.com.

## அடையாள அட்டைகளுக்கான புகைப்பட வடிவமைப்பு



உலகின் பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற 'பாஸ்போர்ட்', 'விஸா' உட்பட 40 வகையான அடையாள அட்டைகளுக்குப் பொருந்தக்கூடிய வகையில் பொதுவான புகைப்படங்களை உருவாக்கக்கூடிய புதுவகை கணினி மென்பொருளை இலவசமாக தரவிரக்கம் செய்யமுடியும். இதனை பிக்ஸெல்டெக் ஐடிஃபொடோஸ் (pixel tech) என்றழைக்கின்றனர். இதனை தரவிரக்கம் செய்யும் வழிமுறை (www.pixel-tech.eu/download/default.aspx)

## 'ஹார்ட் டிஸ்க்' வகைப்படுத்தும் முறை

ஹார்ட் டிஸ்க்குகளை வகைப்படுத்தும்'பார்ட்டிஷன்' முறையை கையாள்வதற்கான புதிய வழிமுறை பயன்பாட்டில் உள்ளது.இதனை'ஈஸியஸ் (Easeus) பார்ட்டிஷன் மெனேஜர் ஹோம் எடிஷன்' என்ற மென்பொருளை இலவசமாக தரவிரக்கம் செய்வதன் மூலம் கையாளமுடியும்.




தரவிரக்கம் செய்யும் முறை. www.easeus.com/download.htm.

## கணினியில் செலவிட்ட நேரத்தை அறியலாம்



நீங்கள் கணினியை இயக்கத் தொடங்கி அன்றைய நாள் முழுவதும் கணினியில் செலவிட்ட நேரம், உட்பட பலவிதமான விபரங்களை அறியக்கூடிய வகையிலான 'மொனிட்டரிங் சொஃப்ட்வெயார்'- மென்பொருள் ஒன்றை கணினிப் பாவனையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும். இதனை தரவிரக்கம் செய்வதன்மூலம் நீங்கள் நாள் முழுவதும் எந்தளவிற்குத் தொழிற்பட்டீர்கள். அதிகமாக எந்த இணையத்தளத்திற்கு சென்றீர்கள் போன்ற விபரங்களை அறிந்து அன்றைய நாளை கணினியில் எவ்வாறு கழித்தீர்கள் போன்ற கணிப்பீட்டை மேற்கொள்ள முடியும். Rescue time எனப்படும் இதற்கான முகவரி www.rescuetime.com என்பதாகும்.




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# ஜப்பான் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி



ஜப்பானில் கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி வெற்றி அடைந்துள்ளது.

தொடர்ச்சியாக 54 வருடங்கள் பதவியில் இருந்த லிபரல் கட்சி முதல் தடவையாக தேல்வியை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்திலுள்ள 480 ஆசனங்களில் 308 ஆசனங்களை ஜனநாயகக் கட்சி வெற்றியீட்டியுள்ள அதேநேரம் ஆளும் கட்சியால் 119 ஆசனங்களை மாத்திரமே வெற்றி கொள்ள முடிந்துள்ளது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜப்பான் தற்போது முகம் கொடுத்துள்ள பாரிய பொருளாதார தாக்கங்களில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதே வெற்றியீட்டிய எதிர்க்கட்சிக்கு உள்ள பாரிய சவாலாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

வெற்றியீட்டியுள்ள எதிர்க்கட்சியின் தலைவர் யுக்கியோ யத்தோயாடா ஜப்பானின் அடுத்த பிரதமராக பதவியேற்கின்றார்.

# புவி வெப்பமடைதலை தடுப்பதற்கான மாநாடு

புவி வெப்பமடைதலின் காரணமாக 'எவரெஸ்ட்' சிகரத்தில் 'பனித்தட்டுக்கள்' உருகி வருகின்றன. இதன் காரணமாக கடல், ஏரிகள் ஆகியவற்றின் நீர்மட்டம் உயர்வடைவதுடன் மக்கள் முகம் கொடுத்துள்ள, முகம் கொடுக்கவுள்ள பிரச்சினைகள் ஏராளம். இது தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதற்காக தெற்காசிய நாடுகளின் சுற்றாடல் துறை அமைச்சர்களின் மாநாடொன்று கடந்த வாரம் நேபாளத்தில் நடைபெற்றது.



இமயமலையிலுள்ள பனிப்பாறைகள் காலநிலை மாற்றத்தின் காரணமாகவே இவ்வாறு தொடர்ச்சியாக உருகி வருகின்றன. இது முழு உலகிற்குமே பாரிய பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று சுற்றாடல்துறை வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். இதுதொடர்பாக எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் சர்வதேச நாடுகள் பங்கு கொள்கின்ற மாநாடொன்று டென்மார்க்கின் கோப்பன்ஹேகன், நகரில் நண்டபெறவுள்ளது. இதற்கான முன்னோடி மாநாடே தெற்காசிய நாடுகளின் சார்பாக நேபாளத்தில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# காட்டுத் தீ

அமெரிக்காவின் 'லொஸ் ஏஞ்சல்ஸ்' நகருக்கு வடபுலத்தில் உள்ள 'சதர்ன் கிரேபியல்' மலைப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் அழிவடையும் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 20,000 பரப்பளவுள்ள நிலப்பரப்பில் மேற்படி காட்டுத் தீ பரவியதால் அதற்கு அருகாமையில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மேலும், தொலைபேசி தொடர்புகள், வானொலி, தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் ஆகியனவும் இதனால் தடைப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அற்லஸ் கேள்வி - 220

**கேள்வி:** தெற்காசிய நாடுகளின் சுற்றாடல்துறை அமைச்சர்களின் மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?

சரியான விடை.......................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 220,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 218 இன் சரியான விடை: பேராயர் டெஸ்மன்ட் டுட்டு**

**பரிசு பெறுவோர்**

என் முஸ்னி,
60/3, பொரல வீதி, வெலிகம.

ஜெஃப்ரி பெர்ணான்டோ,
279, பசறை வீதி,
விஹாரகொட, பதுளை.

த.மாதங்கி,
227, 2 ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்திலும் வீட்டைச் சுத்தம் செய்யும் அக்காவுக்கும் தம்பிக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

**අක්කා: මල්ලි මේ මේසය ටිකක් එහාට කරල තියන්න.**
මல்லி மே மேசய டிகக் எஹாட கறல தியன்ன.
அக்கா: தம்பி இந்த மேசையை கொஞ்சம் தள்ளி வையுங்கள்.

**ඒ මල් පෝච්චිය ගන්න.**
ஏ மல் போச்சிய கன்ன.
அந்தப் பூச்சாடியை எடுங்கள்.



**එහි ඇති වතුර එළියට හලන්න.**
எஹி எதி வதுற எளியட ஹலன்ன.
அதில் உள்ள நீரை வெளியில் கொட்டுங்கள்.

**හොඳ මල් අත්තක් කඩාගෙන එන්න.**
ஹொந்த மல் அத்தக் கடாகென என்ன.
நல்ல பூங்கொத்து ஒன்றைப் பறித்து வாருங்கள்.

**එය මල් පෝච්චියේ දමා මේසය උඩ තියන්න.**
எய மல் போச்சியே தமா மேசய உட தியன்ன.
அதைப் பூச்சாடியில் இட்டு மேசைக்கு மேலே வையுங்கள்.

**දැන් කොහොමද?**
தென் கொஹொமத?
இப்போது எப்படி?

**මල්ලි: දැන් සාලය හරි ලස්සනයි.**
தென் சாலய ஹரி லஸ்ஸனய்.
தம்பி: இப்போது வரவேற்பறை அழகாக இருக்கின்றது.



**පිරිසිදුවටත් තියෙනවා.**
பிரிசிதுவடத் தியெனவா.
சுத்தமாகவும் உள்ளது.

**අක්කා: මල්ලි මේ ඉතුරු පොල් කුඩුවලින් බරාඳය පිහදාමු.**
மல்லி மே இதுறு பொல் குடுவலின் பராந்தய பிஹதாமு.
அக்கா: தம்பி இந்த மிகுதி தேங்காய்ப் பூவினால் விராந்தையைத் துடைப்போம்.

**මල්ලි: හොඳයි අක්කේ. මම පිහන්නම්.**
ஹொந்தய் அக்கே. மம பிஹன்னம்.
தம்பி: நல்லது அக்கா. நான் துடைக்கிறேன்.

**දැන් හොඳයිනේද අක්කේ?**
தென் ஹொந்தய்நேத அக்கே?
இப்போது சரிதானே அக்கா?

**අක්කා: ආ දැන් හොඳයි. අපි හැමදාම අපේ ගෙය මේ වගේ ලස්සණට තියාගමු.**
ஆ தென் ஹொந்தய். அபி ஹெமதாம அபே கெய மே வகே லஸ்ஸனட தியாகமு.
ஆ இப்போது சரி. நாங்கள் எப்போதும் எங்கள் வீட்டை இப்படி அழகாக வைத்துக்கொள்வோம்.

**මල්ලි: ඔව් අක්කේ අපි සතියකට සැරයක් ගෙය පිරිසිදු කරමු.**
ஒவ் அக்கே அபி சதியகட செரயக் கெய பிரிசிது கறமு.
தம்பி: ஆம் அக்கா நாங்கள் வாரத்திற்கு ஒரு தடவை வீட்டை சுத்தம் செய்வோம்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: அந்த பூச்சாடியை எடுங்கள்.
**ඒ මල් පෝච්චිය ගන්න.**

i. நீரை வெளியில் கொட்டுங்கள்.
.................................................................

ii. வரவேற்பறை அழகாக இருக்கின்றது.
.................................................................

iii. வாரத்திற்கு ஒரு தடவை வீட்டை சுத்தம் செய்வோம்.
.................................................................






(அ) Did you see? (Intorrogative)
நீ பார்த்தாயா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, I saw. (Affirmative)
ஆம், நான் பார்த்தேன். (உடன்பாடு)

(இ) No, I didn't see. (Negative)
இல்லை, நான் பார்க்கவில்லை. (எதிர்மறை)

(அ) Did you see the album?
நீ எல்பத்தைப் பார்த்தாயா?

(ஆ) Yes, I saw the album.
ஆம், நான் எல்பத்தைப் பார்த்தேன்.

(இ) No, I didn't see the album.
இல்லை, நான் எல்பத்தைப் பார்க்கவில்லை.

(அ) Did they eat? (Interrogative)
அவர்கள் சாப்பிட்டார்களா?

(ஆ) Yes, they ate. (Affirmative)
ஆம், அவர்கள் சாப்பிட்டார்கள்.

(இ) No, they didn't eat. (Negative)
இல்லை, அவர்கள் சாப்பிடவில்லை. (எதிர்மறை)

(அ) Did they eat their lunch?
அவர்கள் தங்களுடைய பகலுணவை சாப்பிட்டார்களா?

(ஆ) Yes, they ate their lunch.
ஆம், அவர்கள் தங்களுடைய பகலுணவை சாப்பிட்டார்கள்.

(இ) No, they didn't eat their lunch.
இல்லை, அவர்கள் தங்களுடைய பகலுணவை சாப்பிடவில்லை.

(அ) Did they have their dinner?
அவர்கள் தமது இரவுணவை உட்கொண்டார்களா?

(ஆ) Yes, they had their dinner.
ஆம், அவர்கள் தமது இரவுணவை உட்கொண்டார்கள்.

(இ) No, they didn't have their dinner.
இல்லை, அவர்கள் தமது இரவுணவை உட்கொள்ளவில்லை.

(அ) Did the children study?
அந்தப் பிள்ளைகள் படித்தனவா?

(ஆ) Yes, the children studied.
ஆம், அந்தப் பிள்ளைகள் படித்தன.

(இ) No, the children didn't study.
இல்லை, அந்தப் பிள்ளைகள் படிக்கவில்லை.

(அ) Did the children study last night?
அந்தப் பிள்ளைகள் கடந்த இரவு படித்தனவா?

(ஆ) Yes, the children studied last night.
ஆம், அந்தப் பிள்ளைகள் கடந்த இரவு படித்தன.

(இ) No, the children didn't study last night.
இல்லை, அந்தப் பிள்ளைகள் கடந்த இரவு படிக்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் செல்வன் மிகவும் குறும்புக்காரன். அவனின் பெற்றோர் அவனை அதிக கண்டிப்பின்றி செல்லமாக வளர்த்ததே அவனின் குறும்புகளுக்கு முக்கிய காரணமாகும். அவனோ பொய், கீழ்ப்படியாமை ஆகிய தீய குணங்களுடன் வளர்ந்தான். அவன் தந்தையார் தேவசகாயம் ஓர் இசைப்பிரியர். அவர்கள் வீட்டில் ஒரு 'சி.டி பிளேயர்' இருந்தது. நல்ல நல்ல பாட்டுகள் வந்தவுடன் சி.டி.யை வாங்கி வந்து போட்டு பாட்டுகளை ரசிப்பார். வெகுநாளாக அவர் எதிர்பார்த்த பாட்டுடன்கூடிய ஒரு சி. டி.யை வாங்கி வந்திருந்தார். அவை மிகவும் இனிய பாடல்கள். அதில் ஒன்று 'உருகாயோ... நெஞ்சமே உருகாயோ' என்ற பாடல். அதேபோல மறுபக்கம் 'காலமே ... கடவுளைத் தேடாயோ' என்ற பாடல். அந்த இரு பாடல்களும் தேவசகாயத்திற்கு மிகவும் பிடித்தமானவை. ஒரு முறை சி.டியை போட்டுக் கேட்டு விட்டு உறையில் இட்டு பீரோவுக்குள் வைத்துவிட்டு அவர் வெளியில் போய்விட்டார். செல்வனின் அம்மாவும் சந்தைக்குப் போய்விட்டார்.

செல்வனின் குறும்பு அவனை சும்மா இருக்கவிடவில்லை. அப்பாவும் வீட்டில் இல்லையல்லவா? புது சி.டி.யை பீரோவிலிருந்து எடுத்தான். சி.டி. பிளேயரில் போடப் போனான். அப்போது கை நழுவி சி.டி. கீழே விழுந்துவிட்டது. சரிபாதியாக இரண்டு துண்டாக அது உடைந்தது. அப்பா வந்தால் அடிப்பாரே என்ற பயம்.என்ன செய்வது? ஒரு யோசனை வந்தது. பிளாஸ்டிக் பொருள்களை ஒட்டுவதற்கு அப்பா ஒரு பசை வைத்திருக்கிறார் என்பது அவனுக்குத் தெரியும். அதை எடுத்தான். இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பசை தடவி ஒட்டினான். பிளேட்



# திருந்திய உள்ளம்

சிக்கென்று ஒட்டிக்கொண்டது. எடுத்தது தெரியாமல் கவருக்குள் வைத்து அப்பா வைத்திருந்த அதே இடத்தில் வைத்துவிட்டான். ஒட்டியதை அப்பா பார்க்கவா போகிறார்? கூர்ந்து கவனித்தால்கூட ஒட்டுத் தெரியாது என்று மனதைத் தேற்றிக்கொண்டான்.

வெளியே போயிருந்த அப்பா வந்தவுடன் அவருக்கு பாட்டுக் கேட்க ஆவலாக இருந்தது. நேரே போய் பீரோவைத் திறந்தார். பாட்டு சி.டி.யை எடுத்தார். பிளேயரில் போட்டபோது, அதிலிருந்து பாட்டு வரவில்லை. தேவசகாயம் விழித்தார். சி.டி.யை பிளேயரில் இருந்து எடுத்து உற்றுப்பார்த்தார். அதில் ஒட்டு வேலை தெரிந்தது. யார் இதைச் செய்திருப்பார்கள் என்று அவருக்குத் தெரியும். செல்வனைக் கூப்பிட்டார்.

''யார் பீரோவிலிருந்து சி.டி.யை எடுத்தது?''

''எனக்குத் தெரியாதேப்பா... நான் அந்தப் பக்கமே போகலேயே''

மகனை மேலும் பொய்யனாக்க அப்பா விரும்பவில்லை. சி.டி. உடைந்து போனதில் அவருக்கு பெரிய வருத்தம்.மனதுக்குள் புழுங்கியபடி, மௌனமாக இருந்துவிட்டார். செல்வனுக்கு அப்பாவின் முகத்தைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அப்பா பிரியப்பட்டு வாங்கி வந்தார். நான் செய்த குறும்புத்தனத்தால் வீணாய்போய்விட்டது என்று செல்வன் உணர்ந்தான். நேரே அப்பாவிடம் ஓடினான். தன் தவறை அப்பாவிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டான்.செல்வன் அன்றிலிருந்து பொய்,கீழ்ப்படியாமை, கபடம் போன்ற கெட்ட பழக்கவழக்கங்களை விட்டொழித்தான். அப்பா அம்மாவுக்கேற்ற நல்ல பிள்ளையாக வளர்ந்தான்




முன்னொரு காலத்தில் விவசாயி ஒருவனும் அவனது மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர்.

ஒருநாள் தாய் மகளிடம், ''மகளே, வேலை செய்ய நாங்கள் வெளியே போகிறோம். நீ உன் தம்பியைப் பார்த்துக்கொள். நீ நல்ல சிறுமியாக இரு. தெருவிற்கு ஓடிப் போகாதே, இவ்வாறு இருந்தால் உனக்கு புதிய கைக்குட்டை ஒன்று வாங்கித் தருவேன்'' என்று கூறினார்.

இவ்வாறு கூறிவிட்டு அவர்கள் வெளியே சென்றுவிட்டார்கள். ஆனால், தனக்குச் சொன்னதை அச்சிறுமி மறந்துவிட்டாள். ஜன்னலுக்குக் கீழே உள்ள புல்லின் மீது தனது தம்பியை அமர்த்திவிட்டு, தெருவிற்கு ஓடிச்சென்று, விளையாடியதில் நேரம் போனதே அவளுக்குத் தெரியவில்லை. அப்போது, திடீரென்று அன்னப்பறவைகளின் கூட்டம் ஒன்று பறந்து வந்தது. அவை சிறுவனைத் தூக்கித் தங்களது இறக்கைகளின் மீது வைத்துக்கொண்டு பறந்து சென்றுவிட்டன.

சிறுமி வீடு திரும்பினாள், அங்கு தம்பியைக் காணவில்லை. அங்கும் இங்கும் ஓடினாள். ஆனால், அவளின் தம்பியைக் காணமுடியவில்லை.

**இருண்ட காட்டிற்கு அப்பால் ஓர் அன்னப்பறவைக் கூட்டம் பறந்து போனதைத் தவிர அவளால் வேறு எதையும் காணமுடியவில்லை**

எதுவும் புரியாமல் உரத்த குரலில் அழைத்துப் பார்த்தாள், அழுதாள், தேம்பினாள், அம்மாவும் அப்பாவும் தண்டிப்பார்களே என்று புலம்பினாள். ஆனால், பதில் பேச தம்பி அங்கிருக்கவில்லை.

உடனே அவள் திறந்தவெளிக்கு ஓடினாள். ஆனால், அங்கே இருண்ட காட்டிற்கு அப்பால் ஓர் அன்னப்பறவைக் கூட்டம் பறந்து போனதைத் தவிர அவளால் வேறு எதையும் காணமுடியவில்லை. அவளது தம்பியை அவைதாம் தூக்கிப் போயிருக்கவேண்டும் என்று நினைத்தாள். அன்னப்பறவைகள் குழந்தைகளைத் திருடிச் செல்வதுண்டு என்று கூறுவதையும் அவள் கேள்விப்பட்டிருக்கிறாள்.

ஆகவே, அந்தப் பறவைகளைப் பின்தொடர்ந்து சிறுமி ஓடிச்சென்றாள். சூட்டடுப்பு ஒன்று வருகின்ற வரை ஓடிக்கொண்டே இருந்தாள். ''சூட்டடுப்பே, சூட்டடுப்பே அன்னப்பறவைகள் எங்கே பறந்து சென்றன என்பதை எனக்குச் சொல்'' என்றாள்.

''எனது ரை பலகாரம் ஒன்றை சாப்பிடு. உனக்கு




அதை நான் சொல்கிறேன்'' என்றது சூட்டடுப்பு.

''என்ன, ரை பலகாரத்தை நான் சாப்பிடுவதா? வீட்டில் நான் கோதுமைப் பலகாரத்தைக் கூட சாப்பிடுவதில்லையே''

இதனால், சூட்டடுப்பு அவளுக்கு அன்னப்பறவைகள் எங்கு பறந்து சென்றன என்பதைச் சொல்லவில்லை.

சிறுமி இன்னும் சற்றுத் தூரம் ஓடி ஓர் ஆப்பிள் மரத்தைக் கண்டாள். ''ஆப்பிள் மரமே, ஆப்பிள் மரமே, அன்னப்பறவைகள் எங்கே பறந்து சென்றன என்பதை எனக்குச் சொல்''

''எனது காட்டு ஆப்பிள் ஒன்றைச் சாப்பிடு. உனக்கு அதை நான் சொல்கிறேன்'' என்றது ஆப்பிள் மரம்.

''வீட்டில் உள்ள தோட்டத்து ஆப்பிள்களைக்கூட நான் சாப்பிடுவதில்லை'' என்றாள் சிறுமி.

இதனால், ஆப்பிள் மரம் அன்னப்பறவைகள் பறந்து சென்ற திசையை அவளுக்குச் சொல்லவில்லை. ஜெல்லிக் கரைகளுடன் கூடிய பாலாறு ஒன்றை அடைகின்றவரை சிறுமி ஓடிக்கொண்டே இருந்தாள்.

''ஜெல்லிக் கரை கொண்ட பாலாறே, அன்னப்பறவைகள் எங்கே பறந்து சென்றன என்பதை எனக்குச் சொல்''

''எனது ஜெல்லியுடன் பால் கொஞ்சம் சாப்பிடு, நான் சொல்கிறேன்''

''வீட்டில் நான் பாலேடு கூடச் சாப்பிடுவதில்லையே'' என்றாள் சிறுமி.

இதனால், பாலாறு அன்னப் பறவைகள் பறந்து சென்ற திசையை அவளுக்குச் சொல்லவில்லை. சிறுமியோ வயல்வெளிகளிலும் காடுகளிலும் நீண்ட நேரமாக ஓடித்திரிந்தாள். பொழுதும் சாய்ந்து கொண்டிருந்தது. இனி அவள் வீடு திரும்புவதைத் தவிர, வேறு வழியில்லை என்று நினைத்தாள். அப்போது திடீரென்று, கோழிக்கால் மீது ஒரேயொரு ஜன்னலுடன் நின்ற குடிசை ஒன்றைக் கண்டாள். அது தானாகவே சுழன்று கொண்டிருந்தது.

குடிசையின் உள்ளாக சூனியக்காரி பாபா-யகா உட்கார்ந்து நூல் நூற்றுக்கொண்டிருந்தாள். அங்கு பெஞ்சின் மீது வெள்ளி ஆப்பிள்களை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான் அச்சிறுமியின் தம்பி. இதனை அவதானித்த சிறுமி உள்ளே சென்றாள்.

''வணக்கம் பாட்டி''

''வணக்கம் சிறுமியே, இங்கே என்ன காரியமாக வந்தாய்?''

''வயல்வெளிகளிலும் காடுகளிலும் நாள் முழுக்க நடந்தேன். சதுப்பு நிலங்களையும் சேற்று நிலங்களையும் தாண்டி வந்தேன். என்னுடைய சட்டை நன்றாக நனைந்துவிட்டது. உலர்த்திப் போவதற்காக உங்களிடம் வந்திருக்கிறேன்''

''சரி இருந்து, சிறிது பஞ்சு திரி''

பாபா-யகா நூற்புக்கதிரையைச் சிறுமியிடம் கொடுத்துவிட்டு, வெளியே சென்றாள். சிறுமி அங்கேயே உட்கார்ந்து நூற்றுக்கொண்டிருந்தாள். திடீரென்று சூட்டடுப்புக்குக் கீழிருந்து ஒரு சுண்டெலி ஓடிவந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் துடுப்பாட்ட தரப்படுத்தலில் குமார் சங்கக்கார முதலிடத்தில்...



சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தல் பட்டியலில் இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக்கார முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். இரண்டாவது இடத்தை இந்தியாவின் கௌதம் காம்பீரும் மூன்றாம் இடத்தை இலங்கையின் மஹேல ஜயவர்தனவும் பெற்றுள்ளனர்.

மஹேல ஜயவர்தன நியூஸிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது முதலாவது இன்னிங்ஸில் 92 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 96 ஓட்டங்களையும் பெற்றமையின் காரணமாகவே தரப்படுத்தல் பட்டியலில் மூன்றாம் இடத்தை அடைந்துள்ளார்.

நியூஸிலாந்துடனான டெஸ்ட் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் மஹேல 877 புள்ளிகளுடன் தரப்படுத்தல் பட்டியலில் 8 ஆம் இடத்திலேயே இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், பந்து வீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் தெ.ஆபிரிக்காவின் டேல்ஸ்டீன் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளதுடன், முரளிதரன் இரண்டாவது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

தரப்படுத்தல் பட்டியல் விபரம் வருமாறு:

**துடுப்பாட்ட தரப்படுத்தல்**

| இடம் | பெயர் | நாடு | புள்ளி |
|---|---|---|---|
| 01 | சங்கக்கார | இலங்கை | 859 |
| 02 | காம்பீர் | இந்தியா | 847 |
| 03 | மஹேல | இலங்கை | 830 |
| 04 | சந்தர்போள் | மே.இ.தீவுகள் | 821 |
| 05 | மொஹமட் யூசுப் | பாகிஸ்தான் | 818 |
| 06 | மைக்கல் கிளார்க் | அவுஸ்திரேலியா | 808 |
| 07 | யூனுஸ்கான் | பாகிஸ்தான் | 801 |
| 08 | கிரேம் ஸ்மித் | தெ.ஆபிரிக்கா | 782 |
| 09 | பொன்டிங் | அவுஸ்திரேலியா | 779 |
| 10 | கெலிஸ் | தெ.ஆபிரிக்கா | 755 |

**பந்துவீச்சு தரப்படுத்தல்**

| இடம் | பெயர் | நாடு | புள்ளி |
|---|---|---|---|
| 01 | டேல்ஸ்டீன் | தெ.ஆபிரிக்கா | 844 |
| 02 | முரளிதரன் | இலங்கை | 824 |
| 03 | மிச்செல் ஜோன்சன் | அவுஸ்திரேலியா | 786 |
| 04 | மகாயா நிட்னி | தெ.ஆபிரிக்கா | 741 |
| 05 | ஹர்பஜன் சிங் | இந்தியா | 735 |
| 06 | ஸ்டுவர்ட் கிளார்க் | அவுஸ்திரேலியா | 710 |
| 07 | போள் ஹெரிஸ் | தெ.ஆபிரிக்கா | 669 |
| 08 | சஹர்கான் | இந்தியா | 650 |
| 09 | ஜேம்ஸ் என்டஸன் | இங்கிலாந்து | 643 |
| 10 | கிரேம் ஸ்வான் | இங்கிலாந்து | 634 |



## 50 ஓவர் போட்டிகள் நீக்கப்படலாம்?

'டுவென்டி டுவென்டி' போட்டிகளுக்கான வரவேற்பு அதிகரித்துள்ளமையின் காரணமாக இங்கிலாந்தின் பிராந்திய மட்டத்திலான 2010 ஆம் ஆண்டிற்குரிய போட்டிகளிலிருந்து 50 ஓவர் போட்டிகள் நீக்கப்பட்டுள்ளன.

இதற்கு மாற்றீடாக 20/20 போட்டிகளும் 40 ஓவர் போட்டிகளும் அறிமுகப் படுத்தப்படவுள்ளன. 2011 ஆம் ஆண்டில் தெற்காசிய நாடுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் 50 ஓவர் போட்டிகளின் எதிர்காலம் குறித்து தீர்மானமொன்றை எடுப்பதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை ஆயத்தமாகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மின்சாரத்தை சேமிப்போம்
### போட்டி இல - 04
### தலா ரூ.1,000 பணப்பரிசை வெல்லும் வாசகர்கள் வருமாறு;

என்.லதுசன், 18/2, கோரக்கர் வீதி, சம்மாந்துறை.
எம்.மணிவண்ணன், த.பெ.22240,
சென்னியன்ஸ் தோட்டம், ஹல்கரனோயா, ராகலை.
ஜரீனா லரீஃப், 21, கல்பொக்க வீதி, வெலிகம.
எம்.எஃப்.எஃப்.சாமிருத்,
475/1P/23, ஸ்டேடியம் கம,கொழும்பு-14.
கே.சுதர்ஷன், 130/1, முதலாம் வீதி, கூட்ஷேட் வீதி,
தோணிக்கல், வவுனியா.
சுபுன், கன்னட்டிய, மிகிந்தலை.
அபேகுணவர்தன, ஹங்சயா பாலம், பொலன்னறுவை.
மதுவந்த, 381/3B, தொடர்மாடி வீடு, கொழும்பு-09.
ஏ.நிரோஷன்,உடுவர 7 கனுவ,பஹல கொடச, தெமோதர.
கயனிகா, மிஹிந்து மாவத்தை, வத்தேகெதர வீதி, மகரகம.
ஸபீத், எபிதுல் மஹாபீ மாவத்தை, காலி.
ஹர்ஷனி, ஹபரகட, ஹோமாகம.
மதுரங்க, போகல்ல, எகிரியாகல, கேகாலை.
மித்ரா, நாகடுமுல்ல, ரணால.
சவினி திலங்கா, விகாரைக்கு அருகாமையில், ரத்னபுர.
அயேஷா, நுககஹவத்த, ஹப்புத்தளை.
நெலும், முகலங்கமுவ, சீதுவ.
அச்சினி, தெல்கட வீதி, மாத்தறை.
ருவெந்தி, உயர்தர பாலிகா வித்தியாலயம், கண்டி.
கித்மினி, தலம்மாஹார, பன்னல.
பண்டார, ஹபுகும்புர, ஹெட்டிமுல்ல.
திலினி, மாதின்னாகொட, ராஜகிரிய.
தனுஷ்கா, பவிலான, கண்டி.
அஞ்சலா, வல்ஹந்துவ, காலி.
கவிஷ்மா, அலுபோமுல்ல, பானந்துர.
ரத்னசேகர, எலுகாலதென்ன தோட்டம்,
பின்னவல, பலாங்கொட.
குஷான், கப்பல, கொடவெல்ல.
உமேஷா, ஜனஹித இடம், புளத்சிங்கள.
களனி, பொத்தபிடிய, மெனிக்தவெல.
துலாஞ்சலி, பள்ளிவாசல் வீதி, கம்பஹா.
வாசனா இந்துனில், துடுகெமுனு இடம், பேலியகொட.
குமாரி, மாலபே வீதி, கொட்டாவ.
குணவர்தன, மாலபே வீதி, கொட்டாவ.
எஷான், நேபட வீதி, மதுகம.
தினுஷி, கொடுபெம்ம வீதி, கோட்டை.
அஞ்சலிகா, 72, நாவின்ன, மகரகம.
திலுக்ஷ, தெமடகஹகந்த, நவந்தகல.
திஷேல், காலி வீதி, வலகெதர, பலபிட்டிய.
ஷவின், 08, நேர் வீதி, அகலவத்த.
நிபுனி, லபுதுவ, காலி.

# நேரு கிண்ண கால்பந்து; இந்தியா வெற்றி வாகை!



இந்தியாவின் புதுடில்லி நகரில் நடைபெற்ற 'நேரு கிண்ண' கால்பந்தாட்டப் போட்டிகளில் இந்திய அணி செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

இறுதிப் போட்டியில் இந்தியாவும் சிரியாவும் போட்டியிட்டதில் போட்டி முடிவடையும் வரையிலும் எந்தவொரு அணியும் 'கோல்'களைப் பெறாத நிலையில் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. இதிலும் இரண்டு அணியும் 1-1 என்று சமநிலையை அடைந்தன.

இதன் காரணமாக 'பெனல்டிக்' முறையில் வெற்றியீட்டக் கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டபோதே 5-4 என்ற கணக்கில் இந்தியா வெற்றியை அடைந்தது. முதல் சுற்றிலிருந்து எந்தவொரு போட்டியிலும் தோல்வியை சந்திக்காத சிரியா அணி இறுதிப்போட்டியில் மட்டுமே தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்க விடயமாக அமைந்தது.

மேலும், இப்போட்டிகளில் பங்குபற்றிய இலங்கை அணி ஐந்தாவதும் கடைசியுமான இடத்தைப் பெற்றது. இம்முறைதான் முதலாவது தடவையாக நேரு கிண்ணப் போட்டியில் இலங்கை அணி கலந்து கொண்டது.

லெபனானுக்கு எதிரான போட்டியில் மாத்திரமே 4-3 என்ற கணக்கில் இலங்கை வெற்றியீட்டியிருந்தது. இதில் மூன்று கோள்களை மொஹமட் இஸத்தீன் பெற்றுக்கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

# டென்னிஸ் களத்தில் மீண்டும் நடால்



உடல் உபாதையின் காரணமாக சில மாதங்களாக சர்வதேச டென்னிஸ் களத்திலிருந்து ஒதுங்கியிருந்த ஸ்பெய்ன் நாட்டின் ரஃபாயல் நடால் தற்போது மீண்டும் டென்னிஸ் களத்தில் இறங்கியுள்ளார். உலகக் கிண்ண 'வொன்ட்டிரியல்' போட்டித் தொடரிலேயே இந்நாட்களில் நடால் போட்டியிட்டு வருகின்றார்.

இதற்கு முன்னர் இவர் இறுதியாகப் போட்டியிட்டிருந்த 'விம்பிள்டன்' போட்டியின்போது ஏற்பட்ட எதிர்பாராத தோல்வியின் காரணமாக உலகின் 'முதல்நிலை டென்னிஸ் வீரர்' என்ற அந்தஸ்தை அவர் இழக்க நேரிட்டது. எனவே, தற்போது உடல் உபாதை நீங்கி மீண்டும் டென்னிஸ் களம் புகுந்துள்ள நடால் தான் இழந்துள்ள 'முதல்நிலை' அந்தஸ்தை மீண்டும் கைப்பற்றுவதே தனது ஒரே குறிக்கோள் என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸில் ஒரே நாளில் இரண்டு கொண்டாட்டங்கள்


பெஸ்டில் கோட்டை

பிரான்ஸின் பிரசித்தி பெற்ற அடையாளச்சின்னமான ஐஃபள் கோபுரம், கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதி தனது 120 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடியது. அன்றைய தினம் பிரான்ஸ் நாட்டைப் பொறுத்தவரையில் மற்றுமொரு விசேட தினமாக அமைந்தது. அதாவது, பிரான்ஸின் தேசிய தினமாகக் கருதப்படுகின்ற 'பெஸ்டீல்' தினமும் அன்றுதான் அனுஷ்டிக்கப்பட்டது. எனவே, அன்றைய தினத்தில் இவ்விரு விசேட நிகழ்வுகளும் பிரான்ஸ் மக்களால் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. ஐஃபள் கோபுரம் வண்ண மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு, அங்கு வாணவேடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பிரான்ஸிய ஜனாதிபதி நிகலஸ் சார்கோஸி மற்றும் அவரின் பாரியார் கார்லா ப்ரூணி ஆகியோர் இந்தியப் பிரதமரை வரவேற்கின்றனர்.



ஐஃபள் கோபுரத்துக்கு அண்மையிலான வாணவேடிக்கை

## ஐஃபள் கோபுரம்

1889 ஆம் ஆண்டு தொழில் கண்காட்சிக்காக பிரான்ஸின் பெரிஸ் நகரில் ஐஃபள் கோபுரம் நிர்மாணிக்கப் பட்டது. முற்றிலும் இரும்பினால் அமைக்கப்பட்டுள்ள இந்த கோபுரம் 300 மீற்றர் உயரத்தினைக் (அடி 984) கொண்டதுடன், 1930 ஆம் ஆண்டு வரை உலகின் மிகவும் உயரமான கட்டடம் என்ற பெருமையையும் பெற்றிருந்தது. இன்றளவிலும் உலகின் மிகவும் சிறந்த பொறியியல் துறை சாதனையாகவும் உலகின் ஏழு பொறியியல் அதிசயங்களில் ஒன்றாகவும் இக்கோபுரம் கருதப்பட்டு வருகின்றது. அது மட்டுமன்றி, பெரிஸ் நகரின் வனப்பினை மேலும் அதிகரிக்கும் சின்னமாகவும் இது அமைந் துள்ளது. இதனை நிர்மாணித்த பொறியியலாளர் அலெக்சாண்டர் குஸ்டாவ் ஐஃபள் என்பவரின் ஞாபகார்த்தமாகவே இந்த கோபுரத்துக்கு 'ஐஃபள் கோபுரம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அலெக்சாண்டர் குஸ்டாவ் ஐஃபள், பிரான்ஸ் நாட்டு பொறியியலாளராவார். 1832 இல் பிறந்த குஸ்டாவ், 1889 ஆம் ஆண்டு ஐஃபள் கோபுரத்தை நிர்மாணித்தார். பெரிஸ் நகரில் சொந்தமாக வர்த் தகமொன்றினை மேற்கொண்டு வந்த இவர் புகையிரதப் பாலங்களை நிர்மாணிப்பதில் பெயர் பெற்ற வராகத் திகழ்ந்தார். குஸ்டாவ் நிர்மாணித்த புகையிரதப் பாலங்களுள் மிக நீண்ட பாலமாக போர்த்துக்கல்லின் ஒபோடோவிலுள்ள டோரா ஆற்றின் குறுக்காக அமைக்கப்பட்டுள்ள 160 மீற்றர் நீளமான புகையிரதப் பாலம் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி, 1881 இல் ஐக்கிய அமெரிக்கா குடியரசின் சின்னமாகக் கருதப்படும் சுதந்திரதேவியின் சிலைக்கான (Statue of Liberty) இரும்பு சட்டத்தினை அமைத்துக்கொடுத்ததும் இவரேயா வார். 1923 இல் அலெக்சாண்டர் குஸ்டாவ் ஐஃபள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.


அலெக்சாண்டர் குஸ்டாவ் ஐஃபள்

## இவ்வருட பெஸ்டீல் தின அனுஷ்டிப்பு

பிரான்ஸியர்கள் இம்முறை ஜூலை 14 ஆம் திகதி வழமை போன்று பெஸ்டீல் தினத்தினை வெகு கோலாகலமாக அனுஷ்டித்தனர். அன்றைய தினம் பெரிஸ் நகரத்தில் நடந்த ராணுவ அணிவகுப்பானது பிரான்ஸின் ராணுவ பலத்தினை உலகுக்கு எடுத்துக்காட்டியது. இம்முறை ராணுவ அணிவகுப்பில் இன்னும் சிலர் புதிதாக இணைந்துகொண்டனர். அவர்கள் இந்திய ராணுவத்தினராவார்கள். இம்முறை 400 இந்தியப் படையினர் பிரான்ஸிய வீரர்களுடன் பெஸ்டீல் தின அணிவகுப்பில் கலந்துகொண்டமை இதுவே முதன்முறையாகும். இத்தினத்தின் சிறப்பு விருந்தினராக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொண்டார்.

இரண்டாம் உலகப்போரின்போது, இந்தியா பிரான்ஸுக்கு ஆதரவ ளித்தமையும் இந்த நிகழ்வின்போது நினைவுகூரப்பட்டது. பிரான்ஸ் ஜனாதிபதி நிகலஸ் சார்கோஸியின் அழைப்பின்பேரிலேயே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இந்த நிகழ்வில் கலந்துகொண் டார். பிரான்ஸ் ஜனாதிபதி சார்கோஸி மற்றும் அவரின் பாரியார் கார்லா ப்ரூணி ஆகியோர் இந்திய பிரதம ரையும் அவரது பாரியாரையும் வரவேற்றனர். பெஸ்டீல் தின அனுஷ்டிப்பினைக் கண்டுகளிக்க சுமார் 210,000 பேர் பெரிஸ் நகரின் ஷொம்ப்சேலிசே வீதியின் இருமருங்குகளிலும் திரண்டிருந்தனர். அணிவகுப் பில் கலந்துகொண்ட படையினர் பிரான்ஸ் ஜனாதிபதிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர் களுக்கும் மரியாதை செலுத்தினர். அதிநவீன தொழில்நுட்ப வல்லமைகளுடனான பிரான்ஸ் விமானப் படையின் பிரசார விமானங்கள் நிகழ்த்திய சாகசக் காட்சி பார்வையாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.


அணி வகுப்பில் கலந்து கொண்ட படையினர் சிலர்


சுதந்திரத் தூபிக்கு மேல் நிகழ்த்தப்பட்ட விமான சாகசம்.

## பெஸ்டீல் தினம் என்றால் என்ன?

பிரான்ஸின் தேசிய தினமாகவே இந்த 'பெஸ்டீல் தினம்' கொண்டாடப்படுகின்றது. 'பெஸ்டீல்' என்பது கிழக்கு பிரான்ஸில் அமைந்துள்ள மத்திய காலப் பகுதிக்குரிய ஒரு கோட்டை யாகும். அது பின்னர் பாரிய குற்றவாளிகளையும் அரசியல் கைதிகளையும் தடுத்து வைக்கும் சிறைக்கூடமாக மாற்றப்பட்டது. அக்காலத்தில் பிரான்ஸில் ஆட்சி செலுத்திய பூர்போ எனும் அரசன், வாரிசு முறைப்படி சிம்மாசனம் ஏறிய 14 ஆம் லூயி மன்னனை விரட்டியடித்து, அந்நாட்டில் குடிமக்கள் ஆட்சியினை ஏற்படுத்தினான். இந்த பிரான்ஸியப் புரட்சியினை நினைவு கூரும் நோக்கத்துடனேயே குறித்த தினத்தை பிரான்ஸிய மக்கள் கொண்டாடுகின்றனர்.

பிரான்ஸியப் புரட்சியின் ஓர் உச்சக்கட்டமாக புரட்சியாளர்களி னால் 1789 ஆம் ஆண்டு பெஸ்டீல் கோட்டை சுற்றி வளைத்து ஆக்கிரமிக்கப்பட்டதுடன், மனித உரிமைகளை மீறிய பிரான்ஸின் கொடுங்கோல் ஆட்சி வீழ்ச்சி கண்டது. அதனையடுத்து மக்கள் அரசினை ஸ்தாபிப்பதற்கு பிரான்ஸியப் புரட்சி வழிகோலியது. இதனை நினைவுகூருமுகமாகவே ஒவ்வொரு வருடமும் பெஸ்டீல் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அது பிரான்ஸின் தேசிய தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


பெஸ்டீல் தினக் கொண்டாட்டங்களை கண்டுகளிக்க வந்திருந்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.09.16 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 225
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## கணக்குப் புதிர் — 3

அ) 1, 2, 3, 4, 5 ஆகிய ஐந்து இலக்கங்களையும் பயன்படுத்தி, 13 ஐ வர வைக்கவேண்டும்.

ஆ) நான்கு இரண்டுகளைப் பயன்படுத்தி, 9 ஐ வர வைக்கவேண்டும். இவற்றுக்கான விடைகள் தெரிந்தால் எழுதி அனுப்புங்கள்.

## வழி காட்டுங்கள் — 2




## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## அறிவுக்கு விருந்து 222 விடைகள்

**போட்டி: 03**
கடி, தம்பி, மாதம், மாடி, மாசி, பிடி, பாசி, கடிதம், பாகம், கம்பி, தடி, பித்தம்.

**போட்டி: 04**
வட்டங்கள் - 7
சதுரங்கள் - 9
செவ்வகங்கள் - 12

**போட்டி: 05**
ஃபிடல் கெஸ்ட்ரோ - 3 ஆவது படம்

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 222 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஆக்கில் அஹமட்,
தரம் - 2, அப்துல் ஹமீட் மு.வித்.,
இறத்தோட்டை.

**போட்டி: 02**
கே.லதுர்சனா, தரம் - 6A,
முஸ்லிம் ம.வித்., வெலிமடை.

**போட்டி: 03**
மு.தக்ஷலா, தரம் - 7T,
பெண்கள் உயர் தரப் பாட.,
கண்டி.

**போட்டி: 04**
சம்ரா சிராஸ், தரம் - 6G,
அல்-பாஸியதுல் நஸ்ரியா
மு.ம.ம.வித்., பேருவளை.

**போட்டி: 05**
ஏ.எம்.ஆஸிக், தரம் - 10A,
அலிகார் தே.பாட., ஏறாவூர்.

## சரியான விடையில் கோடிடுக — 4

1. இரு பொருள் - ★ கல்வி, செல்வம் ★ சொத்து, சுகம் ★ பிறப்பு, இறப்பு
2. 80 ஆம் ஆண்டு நிறைவு - ★ பவளவிழா ★ பொன்விழா ★ அமுதவிழா
3. 'ஒருவன்' என்பதன் எதிர்ப்பாற் சொல் - ★ ஒருவள் ★ ஒருவி ★ ஒருத்தி
4. வாழையின் இளங்காய்- ★ வடு ★ கச்சல் ★ பிஞ்சு
5. 'ஔடதம்' என்பதன் ஒத்தகருத்துச் சொல் - ★ ஓடம் ★ மருந்து ★ உணவு

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 1





## உங்களுக்குத் தெரியுமா? — 5

புராதன உலகின் ஏழு அதிசயங்களில் இதுவும் ஒன்று. அத்துடன், நவீன உலகின் ஏழு அதிசயங்கள் தவிர, இதற்கு சிறப்பான உலக அதிசயம் என்ற இடம் வழங்கப்பட்டுள்ளது. இதுவே உலகின் மிகப் பிரபலமான பிரமிட்டாகும். இது நான்காவது வம்ச எகிப்திய மன்னன் கூஃபுவின் சமாதி எனக் கருதப்படுகின்றது. இது கி.மு 2560 இல் கட்டி முடிக்கப்பட்டிருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.



எகிப்தின் தலைநகரமான கெய்ரோவின் புறநகர்ப் பகுதியில் இது அமைந்துள்ளது. இதனால், குறித்த நகரின் பெயரினாலேயே இந்தப் பிரமிட் அழைக்கப்படுகின்றது. அப்பகுதியில் அமைந்துள்ள மூன்று பெரும் பிரமிட்டுகளில் பெரியதும் காலத்தால் முந்தியதும் இதுவே. இந்த பிரமிட் 137 மீற்றர்கள் உயரமும் ஒரு பக்கம் 235 மீற்றர்கள் நீளமுடைய சதுர வடிவ அடிப்பகுதி 5.5 ஹெக்டெயர்கள் பரப்பளவையும் கொண்டுள்ளது. 3800 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதனால் கட்டப்பட்ட, உலகின் மிக உயர்ந்த அமைப்பாக இதுவே இருந்துவந்தது. இந்த பிரமிட் என்ன பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?

..............................................................



## ஆழமாகும் பள்ளத்தாக்கு

அரிசோனா பள்ளத்தாக்கே உலகின் மிகப்பெரிய பள்ளத்தாக்காகக் கருதப்படுகின்றது. 1 மைலுக்கும் மேற்பட்ட ஆழம்; 217 மைல் நீளம்; 12 மைல் அகலம் என்று பிரமாண்டமாகக் காணப்படுகின்றது. இப்பள்ளத்தாக்கின் அடிமட்டத்தில் 'கொலராடோ' நதி பாய்ந்து செல்கின்றது. இந்த நதி லட்சக்கணக்கான ஆண்டுகளாக பல வர்ணங்களைக்கொண்ட பாறை அடுக்குகளிடையே ஓடிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறு ஓடிக்கொண்டே இருக்கும் நதியானது, பூமியை மேலும் மேலும் அரித்து, ஆழப்படுத்திக்கொண்டே செல்வதால், இந்தப் பள்ளத்தாக்கு இன்னும் ஆழமாகிக்கொண்டே போவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானச் சின்னமாகக் கருதப்படும் 'ஒலிவ்'





சமாதானச் சின்னமாகக் கருதப்படும் ஒலிவ் மரங்கள் பல ஆண்டுகாலம் உயிர் வாழக்கூடியவை. ஐரோப்பிய நாடுகளில் இம்மரம் செழிப்பாக வளர்கிறது. கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர்களும் ரோமானியர்களும் சமையலுக்கும் உடலில் தேய்த்துக் குளிக்கவும் ஒலிவ் எண்ணெயைப் பயன்படுத்தினர். நன்கு பழுத்த ஒலிவ் பழங்களில் இருந்தே ஒலிவ் எண்ணெய் தயாரிக்கப்படுகின்றது.

ஒலிவ் எண்ணெய் உலகியல் ரீதியில் பொதுவாக சமையலுக்கு மட்டுமன்றி அழகு சாதனங்கள், மருந்து வகைகள், சவர்க்கார வகைகள், எரிபொருள் என்பனவற்றோடு வைபவரீதியான விளக்கேற்றல் என்பனவற்றுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உலக அளவில் சுமார் 75 கோடி ஒலிவ் மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. கிரேக்கம் அதன் விவசாய நிலங்களில் 60 சதவீத நிலத்தை ஒலிவ் உற்பத்திக்குப் பயன்படுத்துகிறது. ஒலிவ் உற்பத்தியில் கிரேக்கம் உலகில் மூன்றாம் இடத்தை வகிக்கிறது.

ஒலிவ் மரங்கள் சமாதானச் சின்னமாகக் கருதப்பட்டு வருவதற்குக் காரணம் என்ன? இதுபற்றி பாரம்பரியமாக ஒரு நிகழ்வு நம்பப்பட்டு வருகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் அதிகமாக பாவம் செய்ததால் கடவுள் உலகத்தை வெள்ளத்தால் அழித்தார். நோவா என்ற மனிதரை மட்டும் படகு ஒன்றில் வைத்துக் காப்பாற்றினார். அப்போது வெள்ளம் வற்றிவிட்டதா என்று அறிந்துவர புறா ஒன்றைப் படகிலிருந்து அனுப்பினார். அது வெளியில் போய் ஒலிவ் இலை ஒன்றை வாயில் கௌவிக் கொண்டு வந்தது. அப்போது வெள்ளம் வற்றிவிட்டதை அறிய முடிந்தது. அதிலிருந்தே ஒலிவ் மரம் சமாதான சின்னமாகக் கருதப்பட்டு வருவதாக ஒரு நம்பிக்கை நிலவுகிறது.



## அன்னப்பறவை பாதுகாப்பு

அன்னப்பறவைகளை பாதுகாப்பதற்கான நிகழ்வு ஒன்று பிரிட்டனில் வருடாந்தம் நடந்து வருகிறது. இந்த நிகழ்வின்போது 'தேம்ஸ்' நதியிலுள்ள அன்னப்பறவைகள் சுற்றிவளைத்து பிடிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு மீண்டும் 'தேம்ஸ்' நதியில் விடப்படுகின்றன.

சுவான் அப்பிங் (Swan Upping) என்னும் இந்த நிகழ்வு அன்னப்பறவை கணக்கெடுப்புக்கென ஆரம்பிக்கப்பட்டதாகும். இக்கணக்கெடுப்பை இரண்டு நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. வருடாந்தம் ஜூலை மாதத்தின் மூன்றாம் வாரத்தில் இந்த கணக்கெடுப்பு நிகழ்வு நடைபெற்று வருகிறது.

## பழங்காலம் முதல் கனி தரும் திராட்சைக்கொடி



ஒரு திராட்சைக்கொடி எவ்வளவு காலத்துக்குக் கனி தரும்? இருநூறு ஆண்டுகளுக்கு மேல் கனி தரும் என்றால் நம்பித்தான் ஆகவேண்டும். 1768 ஆம் ஆண்டில் நடப்பட்ட திராட்சைக் கொடியொன்று இன்னும் கனி தந்து கொண்டு இருக்கின்றதாம்.



இங்கிலாந்தின் 'ஹம்ப்டன்கோர்ட்' தோட்டத்திலேயே இந்த அதிசய திராட்சைக்கொடி இருக்கிறது. உலகிலேயே மிகப்பழைமையான அதேவேளை, மிகவும் பிரபல்யம் பெற்ற திராட்சைக்கொடி இதுவாகும்.



அரண்மனைத் தோட்டத்தில் உள்ள இந்தக்கொடி ஒவ்வொரு ஆண்டும் பெரிதாக வளர்ந்துகொண்டே போகிறதாம். இக்கொடியின் தற்போதைய நீளம் 36 மீற்றர்களுக்கு மேல். இந்தத் திராட்சைக்கொடி 20 ஆவது ஆண்டளவில் 200 கொத்து திராட்சையைக் கொடுத்து வந்ததாம். 1840 ஆம் ஆண்டு இக்கொடி 2500 கொத்து திராட்சைகளைக் கொடுத்ததாம். தற்போது இக்கொடியின் பாதுகாப்புக் கருதி கொத்துகளின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளனர். தற்பொழுது ஆண்டுக்கு 700 திராட்சைக் கொத்துகளை மட்டும் கொடுத்து வருகிறது. அக்காலத்தில் அரச குடும்பத்தினர் மட்டுமே இவற்றை சுவைத்து வந்துள்ளனர். தற்பொழுது அரண்மனைக்கு வரும் எவரும் இதை விலைகொடுத்து வாங்கிச் செல்லலாம்.

## நாடு வளம்பெறத் துணைபுரியும் 'செபு' ஏரி



பிலிப்பைன்ஸில் உள்ள செபு ஏரி (Lake Sebu) அந்நாட்டுக்கு பொருளாதார வளத்தைத் தேடித் தருவதில் பெரும் பங்காற்றி வருகிறது. இந்த ஏரியை சுற்றிலும் பல்வேறு கிராமங்கள் உள்ளன. இந்த ஏரிப்பகுதியின் பாரம்பரியவாசிகளாக டிபொலி (T'boli) உபோ (Ubo) என்னும் ஆதிவாசிகள் வாழ்ந்து வருகின்றனர்.

பொருளாதார வளத்துக்கு இந்த ஏரியில் மேற்கொள்ளப்படும் மீன் வளர்ப்பு முக்கிய பங்காற்றுகிறது. பாரிய மிதக்கும் மீன்கூடுகளில் மீன்கள் வளர்க்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இதேவேளை, ஏரியைச் சூழவுள்ள பகுதிகளில் விவசாயப் பயிர்ச்செய்கையும் செய்யப்படுகின்றது. இப்பகுதியில் உல்லாசப் பயணத்துறையும் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

ஏரியைச் சூழவுள்ள அடர்ந்த காடும் மலைப்பகுதிகளும் ஆதிவாசிகளின் தாயகமாக உள்ளன. இந்த ஆதிவாசிகளில் டிபொலி இனத்தவர்கள் கூடை பின்னுதல், துணிநெய்தல், பித்தளைப் பொருள் உற்பத்தி, மீன்பிடித்தல் ஆகியவற்றில் காட்டும் திறமை காரணமாக மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளனர்.



அருகிவரும் இனமாகக் கருதப்படும் காட்டுப்பன்றி, பிலிப்பைன் மான் என்பனவும் ஏரியை சூழவுள்ள பகுதிகளில் வாழ்கின்றன. மற்றும் அபூர்வ பறவை இனங்களான மீன்கொத்தி, தூக்கணாங்குருவி, நாரை, பிலிப்பைன்ஸ் கொண்டைக்கிளி, பருந்து போன்றவையும் இங்கு வாழ்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கான 'லெப்டொப்' புதிதாக அறிமுகம்

பின்தங்கிய அல்லது வளர்ச்சி அடையாத நாடுகளைச் சேர்ந்த இளம் பிள்ளைகள் பயன்படுத்துவதற்கென 'எக்ஸ்ஓடு' (XO2) என்று பெயரிடப்பட்ட புதியவகை 'லெப்டொப்' கணினியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் 'மெஸச்செட்ஸ்' தொழில்நுட்ப நிறுவனத்தின் விஞ்ஞானியான நிக்லஸ் நெக்ரோ பொன்டேயினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த திட்டத்தின் தொனிப்பொருள் உலகிலுள்ள எல்லாப் பிள்ளைகளின் கரத்திலும் ஒரு 'லெப்டொப்' இருக்கவேண்டும் என்பதும் அவர்களை புத்தகங் களிலிருந்து தூரவிலக்கி மாற்றாக அவற்றின் பயன்களை லெப்டொப் ஊடாகப் பெறுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும் என்பதாகும். இதனை முன்னிறுத் தியே 100 அமெரிக்க டொலர்கள்



## சில நாடுகளில் மாணவர்கள் புத்தகங்களுக்குப் பதிலாக இந்த 'லெப்டொப்'பையே கொண்டு செல்கின்றனர்

செலவில் தயாரிக்கக்கூடிய கணினியை அவர் வடிவமைத்துள்ளார்.

இந்த வகை கணினிகள் குறிப்பிட்டளவில் சில பின்தங்கிய நாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளன. கம்பூச்சியா, ருவான்டா, மொங்கோலியா, ஹெயிட்டி உட்பட இன்னும் பல ஆபிரிக்க நாடுகளிலும் உள்ள பிள்ளைகள் பாடசாலைக்கு இந்த 'லெப்டொப்'பையே கொண்டு செல்கின் றனர். பாடசாலைக்கு புத்தகங்களை இவர்கள் கொண்டு செல்வதில்லை. எல்லாவற்றையுமே 'லெப்டொப்'பில்தான் பெற்றுக்கொள்கின்றனர்.



ஆரம்பத்தில் சில பெற்றோர் இந்த 'லெப்டொப்'பை விரும்பவில்லை. இதில் 'வின்டோஸ்' தொழிற்பாடு இல்லாதிருந்ததே அதற்குக் காரணமாகும். எனினும், இதனைக் கவனத்தில்கொண்டு 'மைக்ரொசொஃப்ட்' நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டின்கீழ் இந்தப் பிரச்சினையும் தீர்த்து வைக்கப்பட்டதால் பெற்றோரின் அபிமானத்தை இது பெற்றுள்ளது.



இந்த புதிய 'லெப்டொப்பை' புத்தகத்தைப் போலவே இரண்டாக மடிக்கமுடியும். விரல்நுனியினால் அதனை செயற்படுத்த முடியும். இது டச்(தொடுகை) ஸ்கிரீன் ஸிஸ்டம் கொண்டது. இதற்கு குறைந்த மின்சாரமே செலவாகின்றது.

குறிப்பிட்ட சில நாடுகளுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள இந்த கணினியானது 2010 ஆம் ஆண்டில் சகல நாடுகளுக்கும் விநியோகிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதன்மூலம் மாணவர்கள் புத்தகப்பொதியின் சுமையிலிருந்து விடுபட்டு புதிய நவீன வழிவகைகளுடன்கூடிய உலகிற்குள் நுழையும் வாய்ப்பும் கிட்டுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# புத்தம் புதிய கண்டுபிடிப்புக்கள்...!

## வயர் தொடர்பில்லாத மின்னேற்றி

கெமரா, (செல்போன்) கையடக்கத் தொலைபேசி, Mp3 Player மற்றும் GPS, PDA உள்ளிட்ட பல்வேறு இலத்திரனியல் பொருட்களை பயன்படுத்துவதற்கு Charger களும் Cable களும் தேவைப்படுகின்றன. இத்தகைய பிச்சினை களைத் தீர்ப்பதற்கு ஒரு புதிய வகையான வழி உள்ளது. Splash Power Splash Pad எனும் கருவியை பாவிப்பது தான் அந்த வழிமுறையாகும். இது பலதரப்பட்ட கருவிகளை மின்னேற்றம் (Charge) செய்யும் ஒரு கருவி ஆகும்.





இதனை வயர் இணைப்பின்றி பாவிக்கலாம். அதாவது, Wireless முறையில் எனலாம். அத்துடன்,இதனைப் பாவிப்பது மிகவும் எளிது. ஏதேனும் ஒரு Splash கருவியை Splash Pad இல் தொடர்புபடுத்தி விட்டால் போதும், இது ஒரு சாதாரண Charger போல் Charge ஆகும். ஏதேனும் ஒரு கருவி Splash Compatible பொருத்தி ஆகவேண்டுமெனின் அதனை ஒரு Splash Module Tm உடன் பொருத்தவேண்டும்.

இத்தொழில்நுட்பமானது Elecfromagnetie எனும் மின்காந்த சக்தியின் உதவியால் செயல்படுகின்றது.



தரையில் பயணிக்கும் போக்குவரத்துச் சாதனங் களில் மின்சாரப் புகையிரத மும் மோட்டார் சைக்கிளும் ஏனையவற்றுடன் ஒப்பிடும் போது, மிக விரைவாக மின்னலெனச் செல்லும் போக்குவரத்துச் சாதனங்கள் எனலாம். பாதையில் செல்லும் பொழுது மின்னலென விரைவாக மோட்டார் சைக்கிளில் பறக்கிறான் என நாம் பொதுவாகச் சொல்வதுண்டு. ஆனால், உண்மையில் பறக்கும் மோட்டார்

## பறக்கும் மோட்டார் சைக்கிள்

சைக்கிள் இப்பொழுது வந்துவிட்டது. ஆம், 21 ஆம் நூற்றாண் டின் ஒரு புதிய கண்டுபிடிப்புத்தான் இந்தப் பறக்கும்மோட்டார் சைக்கிள். இதன் வடிவம் சீனா அல்லது ஜப்பானியர்களின் Tricyle ட்ரைசிக்கள் வடிவம் போல் இருக்கின்றது. மேலும், இது ஒரு சிறிய ஹெலிகொப்டர் போன்று நமக்கு வானத்தில் பறக்கும் வாய்ப்பையும் கொடுக்கின்றது.

இதன் மிகச்சிறப்பம்சம் என்னவென்றால், Propelle blades ஐ பயன்படுத்தி இவ்வாகனத்தை தரையிலிருந்து மேலே உயர்த்தி ஒருமணி நேரத்தில் 160 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கச் செய்யமுடியும். இது ஒரு Multipurpose. அதாவது, பல்நோக்கு வாகனமாகும். இது பாதுகாப்பாக தரையிறங்கக்கூடியது. தரை யில் ஒரு மணித்தியாலத்தில் 90 கிலோமீற்றர் வரை வேகமாக செல்லக்கூடியது. இக்காலத்தில் ஏற்பட்டுவரும் வாகன நெரிச லுக்கு ஒரு புதிய மாற்றுத்தீர்வு என்று கூறினாலும் பொருந்தும். இவ்வாகனத்தை இப்பொழுது வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளவர்கள் கொள்வனவு செய்வதில் பெரிதும் ஆர்வமாக உள்ளனர்.

## சன்கிளாஸில் வீடியோ கெமரா

பகல் வேளைகளில் சன்கிளாஸ் அணிவதை நம்மில் பலர் வழக்க மாகக் கொண்டுள்ளனர். சூரிய ஒளியில் இருந்தும் வேறுசில கார ணங்களுக்காகவும் சன்கிளாஸை பாவிக்க சிலருக்கு கண்மருத்து வர்கள் அறிவுரை கூறுவதுண்டு. இந்த சன்கிளாஸில் பலவகைகள் உண்டு. இவற்றில் ஒன்று சூரிய ஒளிக்கேற்ப நிறத்தை மாற்றிக் கொள்கின்ற சன்கிளாஸ். இதுபோன்ற




இன்னும் எத்தனையோ வகை யான சன்கிளாஸ்கள் உண்டு. ஆனால், வீடியோக் கெஸட் கெமரா பொருத்திய சன்கிளாஸ் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? இக்கண்ணாடி ஏனைய கண்ணாடி களை விடச் சற்றுப் பெரிதாக இருக்கின்றது. வீடியோக் கெமராவின் லென்ஸ் மூக்கிற்கு நேர் மேலே உள்ள கண்ணாடிப் பகுதியில் பொருத்தப்பட்டிருக் கிறது. கெஸட் ரெக்கோடரை கண்ணாடி அணிந்திருப்பவர் தன் இடுப்பில் இணைத்துக் கொள்ளவேண்டும்.

மேற்கூறப்பட்ட லென்ஸில் படும் ஒளி ஒரு சிறிய மின் கரு விக்குச் செலுத்தப்படுகிறது. இக்கருவி லென்ஸில் ஒளியாக பதிவான காட்சியை இலத்தி ரனியல் வடிவத்தில் மாற்றி இடுப்புடன் இணைக்கப்பட்ட ரெக்கோடுகளுக்குக் கொடுக்கும். இந்த வீடியோவில் பயன்படும் வயர்கள் அனைத்தும் பிறருக்குத் தெரியாமல் இருக்க, மறைத்து வைத்துக்கொள்ள ஏதுவான முறையில் வடிவ மைக் கப்பட்டுள்ளன. இந்த அற்பு தமான வீடியோ சன்கிளாஸை நியூஸிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜூன் காம்ப்பெல் என்பவர் கண்டுபிடித்துள்ளார். இந்த வகையான சன்கிளாஸ்கள் காவல் துறையில் குற்றவாளி களின் நடவடிக்கைகளை பதிவு செய்யும் வேலைகளுக்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, செப்டெம்பர் மாதம் 09 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 09, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org